Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1316)
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 23 செவ்வாய்க்கிழமை (06.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 157




சாகசம்

07




கற்றுக் கொள்ள...

08



பிச்சைப் பாத்திரம் ஏந்த ஆசை

10



இவர்களை கடவுள் காக்க

12

# கூட்டமைப்புக்கு முதுகெலும்பில்லையா? கட்சியின் முதன்மை வேட்பாளர் கேள்வி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முதுகெலும்பில்லையா? தமிழர்கள் என்று சொல்ல வெட்கம் இல்லையா? என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் வீ.கனகசுந்தரசுவாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச சபை வேட்பாளர்களுக்கானதும் ஆதரவாளர்களுக்கானதுமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கலந்துரையாடல் நேற்று முள்ளியவளை கற்கப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள பொதுமண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மக்கள் சார்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே கனக சுந்தரசுவாமி இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வன்னியில் நடைபெற்ற போரில் எமது மக்களில் பல்லாயிரக்கணக்கானோர் கொன்று குவிக்கப்பட்டனர். அளவிட முடியாத சொத்தழிவுகள் ஏற்பட்டன. இந்நிலையில் எமது மக்களின் பிரச்சினைகளை முறையிடுவதற்கு ஏற்பட்ட சந்தர்ப்பத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தட்டிக் கழித்துள்ளது. கனகரட்ணம் கூட ஜெனிவா சென்றிருக்கின்றார். ஆனால் தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாப் பயணத்தினைப் புறக்கணித்திருக்கின்றது. இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெட்கப் படவில்லையா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

நெடுந்தீவில் பாடசாலை மாணவியொருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

31 வயதான கந்தசாமி ஜெகதீஸ்வரன் என்ற சந்தேக நபரை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர் படுத்தினர். அதையடுத்து சந்தேக நபரை 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# பொறுப்புக் கூறும் விடயத்தில் காலத்தைக் கடத்துகிறது இலங்கை

## மனித உரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

மனித உரிமை மீறல்கள் குறித்து பொறுப்புக் கூறுவதை விடுத்து இலங்கை அரசாங்கம் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை கடத்தி வருவதாகவும் எனவே இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறலுக்கு பொறுப்புக் கூறும் வகையில் சர்வதேச சுயாதீன விசாரணை பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என மனித உரிமை கண்காணிப்பகம் மீளவும் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமை சபைக் கூட்டத்தொடரில் நேற்று உரையாற்றிய மனித உரிமை கண்காணிப்பகத்தின் பிரதிநிதி இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தி வருவதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க ஐ.நா. கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார். அதனால் இலங்கை மீது சர்வதேச விசாரணை, பிரேரணை தேவையில்லை என அவர் கூறியிருந்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் முக்கிய பங்கு வகித்த இலங்கையின் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய இராணுவம் குறித்து (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மீது அமெரிக்கா கடும் அதிருப்தி



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தான் மேற்கொண்ட விசாரணைகள் மற்றும் திரட்டிய தகவல்கள் மூலம் வெளியிட்ட பரிந்துரைகளில் முக்கிய பிரச்சினைகள் குறித்துப் பொறுப்புக்கூறத் தவறியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடரில் அமெரிக்க பிரதிநிதி ஜோன் மரிஸ் நேற்று உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையின் தற்போதைய (15 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை ஆலோசனை சாதகமாக நோக்க வேண்டும்

## இலங்கைக்கு கூறுகிறது பிரிட்டன்

மனித உரிமை மேம்பாடு தொடர்பான ஆலோசனைகளை இலங்கை அரசாங்கம் சாதகமாக நோக்கவேண்டுமென பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தி நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்களில் அரசாங்கம் ஈடுபட வேண்டுமென இலங்கைக்கான பிரித்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை தொடர்பான கடப்பாடுகளை உறுப்பு நாடுகள் சரியான முறையில் பின்பற்ற வேண்டும் என்பதே பிரித்தானியாவின் உறுதியான நிலைப்பாடு என தூதரகப் பேச்சாளர் சாராஹ் மேன் தெரிவித்துள்ளார். மனித உரிமை நிலைமைகளில் மேம்பாடு ஏற்படுத்தப்பட வேண்டிய நாடுகளில்ஜக்கிய நாடுகள் அமைப்பு தலையீடு செய்வதில் தவறில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துவது தொடர்பில் வழங்கப்படும் ஆலோசனைகளை ஆரோக்கியமான முறையில் அணுக வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கத்தோலிக்க மதகுருமாரிடையே பொறுப்புக் கூறும் விடயத்தில் முரண்பாடு?

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறும் விவகாரத்தில் கத்தோலிக்க மதத் தலைவர்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளது. ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை கத்தோலிக்கத் திருச்சபை எதிர்ப்பதாக இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைக் குருவான கர்தினால் மல்கம் ரஞ்சித் அறிக்கை ஒன்றை முன்னர் வெளியிட்ருந்தார். (15 ஆம் பக்கம் பார்க்க)

# நாற்பதினாயிரம் பேர் கொல்லப்பட்டமை ஆதாரம் உண்டு என்கிறது நிபுணர் குழு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் நாற்பதாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்தமைக்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளதாக, ஐ.நா. செயலாளர் நாயகத்தால் இலங்கை தொடர்பில் மதியுரை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு மீளவும் குறிப்பிட்டுள்ளது. குறித்த நிபுணர் குழுவில் அங்கம் வகிக்கும் மர்சூகி தருஸ்மன், யஸ்மின் சூகா, ஸ்டீவன் ரட்னர் ஆகியோர் நியூயோர்க் டைம்ஸ் செய்தி இதழில் கூட்டாக எழுதியிருக்கும் ஆக்கமொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர். இலங்கையில் உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை, லிபிய மற்றும் சிரிய மோதல்களில் உயிரிழந்த (15 ஆம் பக்கம் பார்க்க)

# அநாவசியமான குற்றச்சாட்டை மேற்குலகம் நிறுத்த வேண்டும்

## இந்தியப் பத்திரிகை தெரிவிப்பு

the pioneer

இலங்கை மீது சுமத்தப்படும் அநாவசியமான குற்றச்சாட்டுக்களை மேற்குலக சமூகம் உடனடியாக நிறுத்தவேண்டும் என்று இந்தியாவிலிருந்து வெளிவரும் 'த பயனியர்' என்ற ஆங்கிலத் தினசரி கண்டனம் தெரிவித்துள்ளது. 'த பயனியர்' ஆசிரியர் தலையங்கத்தில் இது தொடர்பான கண்டனத்தை வெளியிட்டுள்ளது. 'மேற்குலகின் போலியான சந்தேகங்கள்' என்ற தலைப்பின் கீழ் வெளிவந்துள்ள இந்த ஆசிரியத் தலையங்கத்தில் இலங்கை மீது குற்றம் சுமத்துவதற்கு மேற்குலக நாடுகள் எடுக்கும் முயற்சியை ஏனைய நாடுகள் வன்மையாக எதிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. மேற்கத்தேய ஏகாதிபத்திய வாதம் இலங்கை போன்ற நாடுகள் மீது இவ்விதம் (15 ஆம் பக்கம் பார்க்க)

# சிசுவை வீச முயன்ற தாய் பொதுமக்களால் பிடிப்பு

பிரசவித்தவுடன் தனது சிசுவைத் துணியில் சுற்றிப் பற்றைக்குள் வீச முற்பட்ட யுவதி அப்பகுதியில் நின்ற பொதுமக்களால் தடுத்து நிறுத்தப்பட்டு, அந்த ஒரு நாள் சிசு காப்பாற்றப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்றுப் பட்டப்பகல் வேளையில் யாழ். நகரை அண்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளது. அடைக்கல மாதா ஆலயத்தின் ஒதுக்குப் புறத்தில் இப்பெண் மேற்படி சிசுவைப் பிரசவித்திருக்கிறார். பின்னர் அந்த சிசுவைத் (15 ஆம் பக்கம் பார்க்க)

# பள்ளி மாணவி கொடூரக் கொலை
# நெடுந்தீவு பிரதேச சபை கண்டனம்



(நெடுந்தீவு)

நெடுந்தீவில் பள்ளி மாணவியான யேசுதாசன் லக்சினி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டமையை நெடுந்தீவுப் பிரதேச சபை மிக வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இப்பிரதேச சபையின் தவிசாளர் தானியேல் றெக்சியன் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையின் விபரம் வருமாறு,

நெடுந்தீவு மத்தி, மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி இயேசுதாசன் லக்சினி (வயது -12) இவர் கடந்த 03.03.2012 ஆம் திகதி முற்பகல் வேளையில் நெடுந்தீவு மத்தி கிராம அலுவலர் பிரிவில் (ஜே/04) பெருக்கடி வீதியில் பெருக்கடி விநாயகர் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள குடியிருப்பு இல்லாத காணியில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இது தொடர்பாக எமது நெடுந்தீவுப் பிரதேசத்திலே தீவக மக்களின் துன்ப துயரங்களிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் குடும்பப் பிணைப்புடன் கலந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் எமது நெடுந்தீவு பிரதேச சபையானது மக்களோடு இணைந்து ஆற்றிவரும் பணிகள் அளப்பரியது. இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படியான கொடூரப் படுகொலைகள் போர் ஓய்ந்து சுபீட்சப் பயணம் மேற்கொண்டு இருக்கும் எமது மக்களுக்கு மீண்டும் ஒரு பயப்பீதியுடனான வாழ்வைத் தோற்றுவித்துள்ளது. இப்படிப்பட்ட கொலையாளிகள் எமது சமூகத்திலிருந்து அகற்றப்பட வேண்டியவர்கள். இவர்களைப் போன்றவர்களை யாரும் அனுமதிக்க முடியாது. இப்படிப்பட்டவர்கள் கட்டாயம் நீதிக்கு முன்னால் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதோடு இவர்களைப் போல் எமது தீவகத்தில் யாரும் இருக்கவும் கூடாது உருவாகவும் கூடாது என்பதையும் இடித்துரைப்பதோடு இழப்புக்கள் ஈடுசெய்ய முடியாத அளவிற்குத் துயரத்துடனும் துன்பத்துடனும் வாடி நிற்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆறுதல்களையும் அனுதாபங்களையும் கூறிக்கொள்கின்றேன்.

இதேவேளை, இக்கொலைச் சம்பவத்திற்குக் காரணமானவரை சட்டத்தின் முன்னிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுப்பதன் மூலம் இது போன்ற சம்பவங்கள் மேலும் நடைபெறுவதைத் தவிர்ப்பதற்கு மாறாக இச்சம்பவத்தை வெறும் அரசியலாக்கிச் செயற்படும் சுயநல எண்ணங்களைக் கைவிட்டுச் செயற்படுமாறு சம்பந்தப்பட்ட சகலருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# கடல் அட்டை பிடித்த மீனவர்களுக்கு அபராதம்



(யாழ்ப்பாணம்)

அனுமதிப் பத்திரமின்றி குருநகர் கடற்பரப்பில் கடல் அட்டை பிடித்த 4 மீனவர்களுக்கு 36 ஆயிரம் ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

குறித்த பகுதியில் நீரியல் வளத்துறை அதிகாரியினால் 4 மீனவர்களும் கடல் அட்டைகள் மற்றும் படகுகளும் நேற்று கைப்பற்றப்பட்டன. 4 மீனவர்களும் நேற்று நீரியல் வளத்துறையினரால் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு இணங்க ஒவ்வொருவரும் தலா 9 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்ததுடன், படகை மீனவர்களிடம் கையளிக்குமாறு நீரியல் வளத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (எஸ்)

# இசைப்பாடல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி நாடக மன்றத்தின் வெளியீடாக துடுப்பாட்ட வீரர்களை உற்சாகமூட்டும் இசைப்பாடல் வெளியீடு இன்று றொமைன் குக் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அதிபர் அறிவித்துள்ளார்.

# வெடிகுண்டுடன் விளையாடிய சிறுவன் உயிரிழந்தான்

(யாழ்ப்பாணம்)

எறிகணை குண்டை நிலத்தில் வீசியெறிந்து படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுவன் உயிரிழந்துள்ளார்.

விசுவமடு தேராவில் பகுதியில் நேற்று முன்தினம் இந்த விபரீதம் இடம்பெற்றது.

விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்த வீராசாமி வள்ளுவன் (வயது - 16) என்ற சிறுவன் உயிரிழந்துள்ளதுடன், விபத்தில் படுகாயமடைந்த வீராசாமி கோகிலா (வயது - 22) என்ற பெண் கோமா நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சிறுவனின் சடலம் முல்லைத்தீவு பொலிஸாரின் விசாரணைக்குப் பின்னரே பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்து சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். (எஸ்)


# மெய்வல்லுநர் போட்டி

(கோப்பாய்)

யாழ். கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் திருமதி கு.அசோக்குமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக திருநெல்வேலி பங்குத்தந்தை அருட்தந்தை வேன்சஸ்லஸ், ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும் கோப்பாய் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஜங்கரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (135)

# கிராமிய ஆலயங்களுக்கு புதிய நிர்வாகம் தெரிவு



(அரியாலை)

அரியாலை கிழக்கு ஜே/90 கிராம அலுவலர் பிரிவில் 7 இந்து ஆலயங்களுக்கும் ஒரு சனசமூக நிலையத்திற்கும் ஒரே நாளில் புதிய நிர்வாகங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பின் தற்போது மக்கள் மீள்குடியேறியுள்ள இப்பகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் இவ்வாறு புதிய நிர்வாகங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வ.ஸ்ரீகணேசா தலைமையில் அரியாலை கிழக்கு ஸ்ரீமுத்தி விநாயகர் கோயில் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாசன், இந்து கலாசார திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் திருமதி அனந்தலட்சுமி, பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமாரசிங்கம், பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திராதேவி சுபாஸ்சந்திரன், பிரதேச கிராம அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மாசி மகத் திருவிழா

அளவெட்டி மேற்கு, ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மாசி மகம் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

காலை 8.00 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்கு விஷேட சமய சொற்பொழிவு நிகழும். முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்தருள்வார். நண்பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும். (68)

## ஆலோசனைக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் சாவகச்சேரி பொது நூலக அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு இடம்பெற்றது.

இதில் சி.புத்திசிகாமணி தலைவராகவும், வே.வித்தியானந்தன் செயலாளராகவும், ப.நடராஜா பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டதுடன், 9 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (11)

## வீதி புனரமைப்பு

(வடமராட்சி)

மருதங்கேணி பகுதியில் உள்ள மாமுனை - கட்டைக்காடு வீதியானது ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் ஏற்பாட்டில் 8 கிலோ மீற்றர் தூரம் வரை புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இவ்வீதிகள் 14 கிலோமீற்றரிலிருந்து 22 கிலோமீற்றர் வரை கனரக வாகனத்தை பயன்படுத்தி புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

இவ்வீதித் திருத்த வேலையை வீதி அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (100)


**சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு**
**வடமாகாணம்**

**வாடகைக்கு வாகனம் (08 ஆசனம்) அமர்த்துதல்**

**மாகாண அமைச்சின் பெறுகைகள் குழுவின் தலைவரினால் JSDF திட்ட கடமைகளுக்காக வாகனம் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரப்படுகின்றது**

1. நாட்டமுள்ள விலைமனுதாரர்கள் கேள்வி ஆவணங்களை மாகாண சுகாதார அமைச்சு வடமாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்வி ஆவணங்கள் 05.03.2012 தொடக்கம் 12.03.2012 வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நேரத்தில் ஒவ்வொரு தனித்தனி கேள்வி படிவத்திற்கும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000 காசாக செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மூடிய கடித உறையினுள் இட்டு தலைவர், பெறுகைகள் குழு, சுகாதார அமைச்சு வடமாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தில் பிரதான கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைகள் பெட்டியினுள் 14.03.2012 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கத் தக்கதாக சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விகள் கேள்வி நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும்.
4. மேலதிக விபரங்களை அலுவலகத்திலோ அல்லது 021-222-0801 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

இ.இரவீந்திரன்,
தலைவர்,
பெறுகைகள் குழு,
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,
வடமாகாணம். (C/1315)

**சிறு விளம்பரங்கள்**

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1285)

**கணினி திருத்தம் (Computer Repair)**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1305)

**மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படு; ஆனால் உன்னுடைய சொந்த துன்பங்களை உன்னிடமே வைத்திரு!**
- அகிடன் பிரபு -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## கனத்த இருளையும் சிறு தீக்குச்சி விரட்டும்!

ஐ.நா. சபையின் ஒரு பிரிவாகிய யுனெஸ்கோ சில தினங்களை உலகம் முழுவதும் கொண்டாடும்படி வகுத்திருக்கிறது. ஆண்டுதோறும் அவற்றைக் கொண்டாடி வருவதன் மூலம் மனிதப்பண்பாடும், கலாசாரமும் மறைந்து போகாமல் தடுக்கவும், மறந்து போகாமல் தொடரவும் செய்ய முடியும் என்பது அதன் நம்பிக்கை.

பெப்ரவரி மாதத்தில் இரண்டு உலக தினங்கள் வந்து சென்றன. பெப்ரவரி 14 அன்று உலகக் காதலர் தினம் பெப்ரவரி 21 அன்று உலகத் தாய்மொழி தினம். காதலர் தினத்தை இளைஞர்கள் பெரும்பாலும் மறப்பதில்லை. தாய்மொழி தினத்தை யாரும் நினைவு கூர்ந்ததாகத் தெரியவில்லை.

மொழி என்பது கருத்துப் பரிமாற்றத்துக்கான ஒரு சாதனம். எனினும், கால வளர்ச்சியில் தவிர்க்க முடியாத தேவையாகி, ஒவ்வொரு மனிதனையும் உருவாக்கும் ஒன்றாகி விட்டது. இனத்தின் அடையாளமாகி விட்டது.

மனித வரலாற்றை ஆய்வதற்கும் அவர்களது தாய்மொழியே வழிகாட்டியாக அமைகிறது. மனித சிந்தனை, பழக்கவழக்கம், பண்பாடு, வரலாறு எல்லாமே மொழியிலேயே சேகரமாகி அதனூடாகவே கடத்தப்பட்டும் வருகிறது. ஒரு சொல்லை நாம் பொருள் கொள்ளும் போது பின்னணியில் அந்த மொழியில் இருந்த கலாசாரமே செயற்படுகிறது என்கிறார்கள். அதாவது மொழிதான் பண்பாடு; மொழி வேறு பண்பாடு வேறல்ல.

அவரவர் தாய்மொழி அவரவர்க்கு உயர்ந்தது என்பதில் ஐயமில்லை. "என் மொழி போல இனிதான மொழி உலகெங்கிலும் இல்லை" என்று உலகிலுள்ள அத்தனை மொழிக் கவிஞர்களும் தத்தம் மொழியில் சொல்லிவைத்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

"எனது தாய்மொழி நாளை இறந்து விடுமானால் நான் இன்றே இறந்து போவேன்" என்று ரசூல் கம்சுதோவ் கூறினார். அவரது தாய்மொழி மிகச் சிறுபான்மையினரால் பேசப்படும் சோவியத் மலைநாட்டு மொழியான "அவார்" மொழியாகும்.

சீனத் தத்துவஞானி கன்பூசியஸிடம், "சமுதாயத்தை ஆளும் பொறுப்பு உம்மிடம் விடப்படுமானால் என்னென்ன செய்வீர்?" என்று கேட்கப்பட்டபோது, அவர், "நான் முதலில் மொழியைத் திருத்து வேன், அவ்வாறு செய்யாவிட்டால் ஒழுக்கமும், கலையும் கெடும். நீதி தடுமாறும். மக்கள் செய்வது அறியாமல் குழப்பம் அடைவர்" என்றார்.

அரசாங்க நிர்வாகத்துக்கு மொழி எவ்வளவு இன்றியமையாதது என்பதையே இவ்வாறு சொன்னார். நாடு என்று பார்க்கும் போது, இலங்கையில் மூன்று ஆட்சி மொழிகளுள் தமிழும் ஒன்று. மலேசியாவில் நான்கு ஆட்சி மொழிகளில் ஒன்று. சிங்கப்பூரில் நாடளாவிய மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் இருக்கிறது. தென்னாபிரிக்காவிலும் தமிழுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் உள்ளது. இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்திலும் புதுச்சேரி ஒன்றியப் பகுதியிலும் தமிழ் அரசாங்க மொழியாக இருக்கிறது. அத்துடன் இந்திய அரசியலமைப்பின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 22 மொழிகளுள் ஒன்றாகவும் உள்ளது.

இன்று, எட்டுக் கோடிப் பேருக்கு மேல் பேசும் மொழியாக, பேசுவோர் எண்ணிக்கையில் 18வது இடத்தில் தமிழ் இருந்தபோதும், நம் அறிவு வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் தமிழில் இல்லாதது இன்னும் எவ்வளவோ உண்டு என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். தமிழை இன்றைய அறிவியல் வளர்ச்சிகளுக்கு இசையும் மொழியாக ஆக்காமல், தமிழில் உலகின் கலைச் செல்வங்களும் அறிவுக் கண்டுபிடிப்புகளும் உடனுக்குடன் வந்து சேரும் வகை செய்யாமல், தமிழைப் படித்தால் போதும் என்று கதை சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

இன்று தமிழை மட்டும் தெரிந்து வைத்துக்கொண்டு உல கோடு ஒட்டியதாய் என்னென்னவெல்லாம் செய்ய முடியாமலிருக்கிறது என்பதை நாம் பட்டியல் போட முடியும். ஆனால், இருட்டைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதைவிட ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றுவது நல்லது என்பார்கள். இத்தகைய ஆண்டுத் தினங்கள் வருவது, அப்போதேனும் நாம் அந்த மெழுகுவர்த்திகளை ஏற்ற மனமெண்ணுவதற்காகத்தான்.

- ஆசிரியர் -

# சம்பள உயர்வு கோருகிறது உழைக்கும் பெண்கள் முன்னணி

(கொழும்பு)

தனியார்துறை, ஸ்தாபனமயமற்ற மற்றும் முறைசாரா துறைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பள உயர்வைப் பெற்றுத் தரும்படி தனியார் துறையையும், அரசாங்கத்தையும் கோருவதாக இலங்கையில் முதல் பெண் தொழிற்சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள உழைக்கும் பெண்கள் முன்னணி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

உழைக்கும் பெண்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்திய நிகழ்வு நேற்றுமுன்தினம் கண்டி தபால் நிலைய மண்டபத்தில் உழைக்கும் பெண்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கி.லோகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

இதில் அவர்கள் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

தனியார் துறையின் கடை மற்றும் பாரிய சிறப்புச் சந்தை நிலையங்களில் பணிபுரியும் பெண்கள் கிழமையில் ஏழு நாட்களும் சேவை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமையால் அவர்களின் தொழில் உரிமைகள் மீறப்பட்டுள்ளது. ஆகையால் தற்போதுள்ள கடை பணிமனைச் சட்டத்தில் விதந்துரைக் கப்பட்டுள்ள வார இறுதியில் விடுமுறை நாளொன்றை கட்டாயமாக்கும்படி தனியார் துறையினரையும் அரசையும் கோருகின்றது..

உலக தொழிலாளர் ஸ்தாபனம் அண்மையில் வீட்டுப் பணிமனைத் தொழிலாளர்களுக்காக பிரகடனப்படுத்திய சமவாயத்தில் கைச்சாத்திட்ட எமது அரசாங்கமானது உடனடியாக தேசிய ரீதியில் வீட்டுப் பணியாளர்களுக்கான சட்டமொன்றினைக் கொண்டு வரும்படி கோருகின்றோம்.

கடைப் பணிமனைச் சட்டத்தின கீழ் வழங்கப்பட்டுள்ள தொழில் உரிமைகளை முறையாக நடைமுறைப்படுத்தவதற்கு நடவடிக்கை மேற்கோள்ளும்படி அரசாங்கத்தைக் கோருகின்றது.

நாட்டின் அரசியலமைப்புக்கு அமைய, தனியார் துறை தொழிலாளர்கள் ஒன்று சேருவதற்கான தொழிற்சங்க உரிமையை நிலை நிறுத்த வேண்டும்.

தோட்டத்துறை பெண் தலைவிகள் தமது பிரச்சினைகளை தோட்ட முகாமையாளருடன் பேசுவதற்கு வசதியாக அவர்களுக்கு அரை நாள் சம்ளத்துடன் கூடிய விடு முறையை வழங்கவேண்டும்.

பெண்கள் அரசியல் சுதந் திரத்தை உறுதி செய்யும் வகையில் நாடாளுமன்றத்திலும் ஏனைய உள்ளூராட்சி மன்றங்க ளிலும் 33 விகித பிரதிநிதித் துவத்தை அரசியல் அமைப்பு ரீதியாக உறுதி செய்யவேண்டும்.

அரச பெண் ஊழியர்களுக்கு வழங்கப்படும் பிரசவ விடுமுறை நாட்களையும், பிரசவ சகாய நிதியையும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஏனைய தனியார் துறை தொழிலாளர்களுக்கும் வழங்குவதற்கான சட்டமொன்றை கொண்டு வர வேண்டும் எனத் தெரிவிக்கப்படடுள்ளது.

# ஆர்ப்பாட்டங்களின்போது பொலிஸார் பாரபட்சம்

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் போதே பொலிஸார் கண்ணீர் புகைப்பிரயோகத்தை மேற்கொள்கின்றனர்.

எனினும் ஆளும் கட்சியினர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்போது கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொள்ளப்படுவதில்லை என்று ஐ.தே.க. கட்சியின் ஊடகப்பேச்சாளர் கயந்த கருணா திலக்க தெரிவித்துள்ளார்

அரசாங்க கட்சியினர் தமக்கு எதிரான மனித உரிமைகள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்தும்போது கண்ணீர்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்படுவதில்லை-

எனினும் மக்கள் பொருட்களின் விலையேற்றம் உட்பட்ட விடயங்களுக்காக ஆர்ப்பாட்டம் செய்யும் போது அதன் மீது கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொள்ளப்படுகிறது

இது அரசாங்கத்தின் இரட்டை வேடத்தைக் காட்டுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தக்குற்றச்சாட்டு தொடர்பில், பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் ஆர்ப்பாட்டங்களினால் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்புகள் ஏற்படுத்தப்படுவதில்லை எனினும் எதிர்க்கட்சிகள் தமது ஆர்ப்பாட்டங்களின்போது முறுகல் நிலையை தோற்றுவிக்கின்றன. எனவே அதனை கட்டுப்படுத்த கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

# சூதாட்ட நிலையம் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு, தங்கொட்டுவ - தம்பரவில பிரதேசத்தில் சூதாட்ட நிலையம் ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த இடத்தில் 20 பேர்வரை சூதாட்ட நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் குறித்த சூதாட்ட நிலையத்தை சுற்றிவளைக்கச் சென்றபோது, அங்கிருந்தவர் கள் தப்பியோட முனைந்துள்ளனர்.

அதனையடுத்து, அவர்களை துரத்திச் சென்ற பொலிஸார் ஒருவரை கைது செய்தனர்.

அவர் பொலிஸார் உத்தியோகத்தர் ஒரு வருடன் முறுகலில் ஈடுபட முனைந்தபோது, பொலிஸ் உத்தியோகத்தர் வைத்திருந்த கைத்துப்பாக்கி வெடித்துள்ளது.

அதில் படுகாயமடைந்த 32 வயதுடைய சந்தேக நபர் நீர்கொழும்பு மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருகிறார்.

தங்கொட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பசுக்களும் மசகு எண்ணெய் குடிப்பது போல் தெரிகிறது

## கூறுகிறார் ரணில்

பசுக்களும் மசகு எண்ணெய் குடிக்கின்றது போல் தெரிகிறது எதிர்வரும் காலங்களில் பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார். வென்னப்புவ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் உரை நிகழ்த்துகையில், இலங்கை ஒரு புதுமையான நாடு எரிபொருளை பயன்படுத்தி பாண் உற்பத்தியை மேற்கொள்ளும் ஒரே நாடு இலங்கை. காஸின் விலை அதிகரிக்க போவதாக தற்போது கூறுகின்றார்கள். பால்மாவின் விலையும் அதிகரிக்கப்படும். எமது பசுக்களும் மசகு எண்ணெய் குடிக்கின்றது போல் தெரிகிறது. அப்படியில்லை என்றால் எவ்வாறு பால்மாவின் விலை அதிகரிக்கப்படும். மக்கள் இன்று மிக கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பலாங்கொடையில் வர்த்தகரிடம் கொள்ளை

(கொழும்பு)

பலாங்கொடை - ராஸகல பகுதியில் வர்த்தகர் ஒருவரின் ஏழு இலட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்தப் பணம் நேற்றுக் காலை கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பலாங்கொடை நகரிலுள்ள வங்கியொன்றில் வைப்பிலிடுவதற்காக கொண்டு வரப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்தப் பணம் கொள்ளையிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த கொள்ளையர்கள் பணத்தைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிராமிய சுகாதாரத் தொண்டர்களுக்கு குடும்பநிலை கருதி நியமனம் வழங்கப்படும்

## ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக ஊதியம் ஏதுமின்றி பணியாற்றிவரும் சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அவர்களுக்கென ஓர் ஒன்றியத்தை அமைத்து நியமனத்தை வழங்கி வருகின்றோம் என தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தென்மராட்சிப் பிரதேச கிராமிய சுகாதாரத் தொண்டர்களுடனான கலந்துரையாடல் ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சிப் பிரதேச அலுவலகத்தில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந் திரன் (கமல்) தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

யாழ்.குடாநாட்டில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் சமுர்த்தி அலுவலர்கள் நியமனம் என அனைத்து நியமனங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியிருந்தார்.

அதேபோல யாழ்.போதனா வைத்திய சாலையில் தற்காலிக அடிப்படையில் பணியாற்றிய சுகாதார தொண்டர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்கி இருந்தோம். தற்போது கிராமிய சுகாதாரத் தொண்டர்களாக உள்ளவர்களை அவர்களது சேவைக்காலம், குடும்பத்தின் பொருளாதார நிலை, ஆதரவற்றோர் போன்ற காரணங்களை முன்னிலைப்படுத்தி நியமனத்தை முதற்கட்டமாக வழங்கவுள்ளோம். இதனூடாக இவர்களின் குடும்ப பொருளாதார நிலையை மேம்பாடடையச் செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் சர்வதேச அமைப்பாளர் மித்திரனும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ், ஈ.பி.டி. பியின் கொடிகாமம் இணைப்பாளர் விஸ்வா, ஈ.பி.டி.பியின் சாவகச்சேரி இணைப்பாளர் வலன்ரைன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் தென்மராட்சிப் பிரதேசத்தை சேர்ந்த 80 வரையான தொண்டர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அதிகளவில் மணல் அகழ்வு உவர்நீர் உட்புகும் அபாயம்

கொடிகாமம், கெற்பேலி, பாலாவி ஆகிய பகுதிகளில் அதிகளவில் மணல் அகழ்வுகள் இடம்பெறுவதால் அப்பகுதியில் நிலம் பள்ளமாகி உவர் நீர் உட்புகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சியில் இடம்பெற்று வரும் வீடமைப்பு திட்டங்களுக்கு என இனங்காணப்பட்ட மேற்படி இடங்களில் மணல் எடுப்பதற்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் திங்கள், வெள்ளி ஆகிய நாட்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி ஒரு சிலர் ஏனைய நாட்களிலும் மண் அகழ்வை மேற்கொண்டு வருவதாகவும், இவ்விடயம் குறித்து அதாவது சாவகச்சேரிப் பிரதேச சபை மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு மணல் அகழ்விற்குத் தடைவிதிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டு இதுவரை அதுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளபடவில்லை எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வீடமைப்புக்காகச் சிலர் வாகனங்கள் மூலம் தவசிக்குளம், மிருசுவில் ஆகிய பிரதேசங்களிற்குச் சென்று மணல் ஏற்றி ஏனைய இடங்களுக்கு அதிக விலையில் [illegible] செய்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தென்மராட்சிப் பிரதேசத்தில் வீடமைப்புப் பணிகள் தற்போது நிறைவடைந்து வருவதால் அடுத்தகட்ட திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் வரை மணல் அகழ்வுக்கு அனுமதிக்க வேண்டாம் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (11)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்; மீன்பிடி உபகரணங்கள் நாசம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகளவில் காணப்படுவதால் எமது கடற்றொழில் பாதிக்கப்படுவதாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு கடற்பகுதியில் அத்துமீறிய இந்திய மீனவர்கள் இழுவைப்படகுகளில் வந்து 20 இலட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள், வலைகள், படகுகளைச் சேதப்படுதியதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீளவும் இந்திய மீனவர்களால் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்பட்டதாகவும், இதனால் இங்குள்ள மீனவர்களின் தொழில் பாதிப்படைந்துள்ளதுடன், நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கினறனர்.

# வட்டக்கச்சி முன்பள்ளிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது



(யாழ்ப்பாணம்)

வட்டக்கச்சி புனித சூசையப்பர் முன்பள்ளிக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல்லை பங்குத்தந்தை தே.யூட்தாஸ் அடிகளாரால் கடந்த மாத இறுதியில் நாட்டி வைக்கப்பட்டது.

பங்குத்தந்தையைத் தொடர்ந்து வட்டக்கச்சி மகாவித்தியாலய அதிபர் மனுவல், தர்மபுர மகாவித்தியாலய அதிபர் பூலோகசிங்கம், ஆலய அருட்பணிச்சபைப் பொருளாளர் ஸ்ரீவன் ஆகியோர் அடிக்கற்களை நாட்டினர்.

நீண்ட காலமாக முன்பள்ளி வசதி இல்லாது இருந்து இந்தக் கிராமத்தில் புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் 28 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி கரித்தாஸ், கியூடெக் நிறுவனம் இந்த முன்பள்ளியை அமைத்துக் கொடுபபது குறிப்பிடத்தக்கது. (21)

# வாழ்வாதார ரீதியில் பின்தங்கி வாழும் கள்ளப்பாடு வடக்குக் கிராம மக்கள்

## உதவிகளைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு வடக்குக் கிராம ம்க்கள அடிப்பண்ட வசதிகள் எதுவுமின்றிக் கஷ்டங்களுடன் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்கள் மீள்குடியேறி 2 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் 172 குடும்பங்களைச் சேர்ந்த 710 பேர் வசித்து வருகின்றனர். இம்மக்களுக்கு அடிப்படை வசதிகளாக வீட்டுத்திட்டம், மின்சாரம், வீதிப்புனரமைப்பு, வாழ்வாதார உதவிகள் என்பன வழங்கப்படாத நிலையில் பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் யுத்த அனர்த்தங்களினால் 55 வீடுகள் சேதமடைந்த நிலையில் திருத்த வேலைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டதுடன், முழுமையாக வீட்டுத்திட்ட வசதிகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

இதைவிட 22 வீடுகளைத் திருத்தும் பணிகள் அம்கோர் நிறுவனத்தினால் முன்னெடுக்கபட்டுள்ள நிலையில் அவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதைவேளை, 68 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை புனரமைக்கப்படவில்லை எனவும் மக்களால் தெரிவிக்கப்படுகிறது. (04)

# சூரியசக்தி நீர்ப்பாசனத் தொகுதியை பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மானிய விலையில் சூரியசக்தியில் இயங்கும் நீர்ப்பாசனத் தொகுதியை விரைவாகப் பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு 11 ஆயிரம் ரூபா பெறுமதியில் மானிய அடிப படையில் சூரிய சக்தியில் இயங்கும் நீர்ப்பாசனத் தொகுதியை விவ சாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை பணத்தைச் செலுத்தி வரும் நிலையில் தமக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்படவில்லை என விவசாயிகள் தொ]விக்கின்றனர்.

இவ்விவசாயிகள் கடந்த வருடம் இவ்விடயம் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபருக்குத் தெரியப்படுத்திய நிலையில் அரச அதிபர் விவசாயிகளின் தேவையைக் கருதி இவ் உபகரணங்களை வழங்குவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்ததாகவும், எனினும் இதுவரை இச்செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படவில்லை என விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே இவ்விடயம் குறித்து சம் ந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து உபகரணங்களைப பெற்றுத் தருமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (கே)

# கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

மத்திய கல்வி அமைச்சின் உடற்கல்விப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளின் உடற்கல்வி விளையாட்டுச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா சைவப் பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வடமாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளின் உடற்கல்வி பாட ஆசிரியர்கள் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் கலந்து கொள்ளுமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ வரன் அறிவித்துள்ளார். (109)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு "லிப்ற்" வசதி கோரும் நோயாளர்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொது மருத்துவமனை நவீன வசதிகளுடன் இயங்கி வருகின்ற போதிலும் லிப்ற் வசதிகள் இல்லாது நோயாளர்கள் தாம் பெரும் அவதிப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2003ஆம் ஆண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட போதிலும் 2 மாடிகள் கொண்டதாக வசதிகளுடன் அமைக்கப்பட்டுத் தற்போது இயங்கி வருகிறது.

இந்த நிலையில் இவ்வைத்தியசாலையில் லிப்ற் வசதிகள் இல்லாத நிலை காணப்படுவதுடன் மகப்பேற்றுப் பிரிவு மற்றும் முக்கிய சிகிச்சைப் பிரிவுகள் என்பன மேல் மாடியில் இயங்கி வருவதால் கர்ப்பிணிகள் சிரமத்தின் மத்தியில் மேலே செல்ல வேண்டிய நிலை காணபபடுகிறது.

முதியோர்களும் மேல் மாடிக்குச் செல்வதில் கஷ்டங்களை எதிர்நோக்கு வதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

தற்போது கிளிநொச்சியில் மக்கள் மீள்குடியேறி 2 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இவ்வைத்தியசாலையில் நாளாந்தம் அதிகளவான மக்கள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

எனவே கர்ப்பிணிகள், முதியோர்கள் நலனைக் கருத்திற் கொண்டு இவ்வைத்தியசாலையில் லிப்ற் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு நோயாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (கே)

# குண்டும் குழியுமாகக் காணப்படும் இராசாவின் தோட்டம் வீதி

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதிக்கு குறுக்காகச் செல்லும் இராசாவின் தோட்டம் வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் அவ் வீதியூடாக பயணத்தை மேற்கொள்வோர் பெரும் இடையூறுகளை எதிர் நோக்குவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதிப் பகுதி குண்டும் குழியுமாக சேதமடைந்துள்ளதுடன், கற்கள் பரவிக்காணப்படுவதால் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் சைக்கிள் காற்றுபோய் நடந்து செல்லும் அவல நிலை ஏற்படுவதாக பயணிப்போரால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதைவிட இவ் வீதியால் நாளாந்தம் பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்.நகரப்பகுதியில் பல்வேறு வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்ற போதிலும், மக்கள் அதிகம் பிரயாணம் செய்யும் வீதியான குறித்த வீதியை ஓரளவேனும் புனரமைப்புச் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எஸ்)

# யாழில் இந்திய கலாச்சார மண்டபம்; வேலை விரைவில் நிறைவுபெறும்

## -இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம்-

(யாழ்ப்பாணம்)

30 வருட யுத்தத்தில் வட பகுதி மக்கள் நலிவடைந்துள்ளார்கள் என்று சிந்திப்பது தவறான விடயம் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

வட இலங்கை சங்கீத சபை நடத்திய ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 165ஆவது ஆராதனை விழா பெருமாள் கோவில் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

யாழ்ப்பாணமக்கள் இசையை இரசிப்பவர்கள். அவர்கள் கலை, கலாச்சாரம், பண்பாடு போன்ற விடயங்களில் ஆர்வத்துடனும் செயற்படுகின்றனர்.



இந்திய துணைத் தூதரகம் யாழ்ப்பாணத்தில் கலை, கலாச்சாரம் என பல்வேறு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கலை மற்றும் கலாச்சார விழுமியங்களில் ஒற்றுமை இருக்கின்றது. இதனாலேயே இந்நாடுகளுக்கும் இடையில் சிறந்த உறவு காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் முற்றவெளிப்பகுதியில் இந்திய கலாச்சார மண்டபம் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மிக விரைவில் கட்டட வேலைகள் முடிவடைந்தும் கலை, கலாச்சாரம் பண்பாடு போன்ற எமது தமிழ் பண்பாடுகளை மேம்படுத்துவதற்கு அவை தலைசிறந்த இடமாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார். (எஸ்)

# மல்லாவி இலங்கை வங்கிக் கிளை அபிவிருத்திச் சங்கம் உருவாக்கம்

(மல்லாவி)

மல்லாவியில் இயங்கி வரும் மாங்குளம் இலங்கை வங்கிக் கிளையினால் உருவாக்கப்பட்ட வங்கி அபிவிருத்திச் சங்கம் பதிவு செய்யும் நிகழ்வும், உறுப்பினர்களின் சத்தியப் பிரமாணம் மேற்கொள்ளும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது.

அனிச்சயன்குளம் அதிசயவிநாயகர் அபிவிருத்திச்சங்கம் இயங்கிவரும் பொது நோக்கு மண்டபத்தில் மல்லாவி இலங்கை வங்கி முகாமையாளர் க.மனோகரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மல்லாவி இலங்கை வங்கியில் சிறு சேமிப்பு குழுக்கள் இணைந்து வாழ்வாதார அபிவிருத்தியை உருவாக்கி சேமிப்புக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தெரிவு இடம்பெற்றது.

இப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் அனிச்சயன்குளம் கிராமத்திலுள்ள மக்கள் இச் சிறு சேமிப்புக் குழுக்களுடன் இணைந்து சிறு தொகை பணத்தை சேமித்து அதனை வங்கியில் வைப்பு செய்வதுடன், அதன் மூலம் வங்கியூடாக கடன் தொகையைப் பெற்று தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது இச் சிறு சேமிப்பு குழுக்கள் சிறந்த முறையில் இயங்கி வருவதுடன் இச் சிறு குழுக்கள் தமக்கென சங்கமொன்றை அமைத்து அச்சங்கத்தினூடாக பணத்தை வழங்கி அதன் மூலம் அனிச்சயன்குளம் கிராமத்திலுள்ள மக்கள் அனைவரது வறுமையை ஒழித்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தி இன்பமுடன் வாழமுடியும் என்ற நோக்குடன் செயற்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் சங்கத்திற்குட்பட்ட அனைத்து உறுப்பினர்களும் சங்கத்தின் சட்ட நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு செயற்படுவோம் என சத்தியப்பிரமாணம் மேற்கொண்டனர்.

இந் நிகழ்வில் வவுனியா பிராந்திய இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.பிரேம்குமார் பிரதம விருந்தினராகவும், மத்திய வங்கி அதிகாரி ஸ்ரீபத்மநாதன், துணுக்காய் பெரும்பாக உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம், அனிச்சயன்குளம் அ.த.க. பாடசாலை அதிபர் கு.ஜெயதீஸ்வரன், இராணுவ அதிகாரி எல்.எல்.ஏ.விஜய கோன், சமாதான நீதவான் ச.செல்வரெத்தினம், அனிச்சயன்குள கிராம சேவையாளர் இ.சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (143)

# வலுவூட்டல் கூட்டம்

கோண்டாவிலில் அமைந்துள்ள பொது நூலகத்தில் நூலக மேம்பாடு தொடர்பான வலுவூட்டல் ஆலோசனைக்கூட்டம் இன்று காலை 8.30 மணிக்கு நூலகத்தில் இடம் பெறவுள்ளது. இக் கூட்டத்தில் நூலகம் தொடர்பான ஆர்வலர்கள் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட டுள்ளது.

# முரசின் இன்றைய பலன்

(06.03.2012 -செவ்வாய்க்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 23 ஆம் திகதி. திரயோதசி முன்னிரவு 6.52 வரை.
நட்சத்திரம் ஆயிலியம் முன்னிரவு 9.45 வரை. சித்தயோகம் பிரதோஷவிரதம்
இராகுகாலம் 3.25 - 4.55 வரை. சுபநேரம் 10.55 - 12.25 வரை.
எமகண்டம் 9.25 - 10.55 வரை. குளிகைகாலம் 12.25 - 1.55 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புத்திமேன்மை, பரஸ்பர உதவி, நினைத்தது வெற்றி, பிரார்த்தனை பலிக்கும். |
| ரிஷபம் | உறவினர் வருகை, பிரயாணங்கள், கணவன் மனைவி திருப்தி, பொறுமை. |
| மிதுனம் | தியாகசிந்தனை, அதிர்ஷ்டம், நண்பர்கள் உதவி, பிரச்சினைகள் தீரும். |
| கடகம் | சாதனை, கடின உழைப்பு, மருத்துவச் செலவு, உறவினர் உதவி. |
| சிம்மம் | நன்மைகள், அரச அனுகூலம், வெளிநாட்டுப் பயணம், எதிர்பாரா இலாபம். |
| கன்னி | குடும்பசுகம், பணநெருக்கடி, கருத்து வேறுபாடு, புத்திரரால் மகிழ்ச்சி. |
| துலாம் | சுபச்செலவு, பணப்புழக்கம், கடின உழைப்பு, வாகனச்சேர்க்கை. |
| விருச்சிகம் | நல்லாசிகள், அவசரம் கூடாது, திருமணம் கைகூடும், எச்சரிக்கை. |
| தனுசு | பிரயாணநன்மை, புத்திரபாக்கியம், மனதில் அச்சம், மறைமுகவருவாயில் கவனம். |
| மகரம் | நற்கீர்த்தி, வரவுக்கு மீறிய செலவுகள், தொழிலில மனஸ்தாபம், பிரயாணத்தில் கவனம். |
| கும்பம் | மனைவி வழிநன்மை, மருத்துவச்செலவு, எதிர்பாராத நற்செய்தி, அரச உதவி. |
| மீனம் | இலாபதினம், கடன்தொல்லை நீங்கும், திருமணம் கைகூடும், பதவி உயர்வு |

# இரணைமடுக் குளத்தின் கீழ் 7594 ஏக்கரில் நெற்செய்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுக் குளத்து நீரைப் பயன்படுத்தி சிறுபோகபயிர்ச்செய்கையினை மேற்கொள்ள 7 ஆயிரத்து 954 ஏக்கர் நிலப்பரப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக் குளத்தின் கீழ் இடதுகரை மற்றும் வலதுகரைமற்றும் நீர்ப்பாசன காணிகளிற்கு நீர்வழங்கும் வாய்க்காலகளும் கழிவு வாய்க்கால்களும் புனரமைப்பு செய்யப்பட வேண்டியிருப்பதால் குறிப்பிட்ட சில பகுதியில் மட்டுமே சிறுபோக செய்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசனக் குளங்களைப் பயன்படுத்தி 7ஆயிரத்து 594 ஏக்கரில் சிறுபோக செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தினால் தெரிவிக்கப்படுகிறது.

# நோயாளர்களைப் பார்வையிடும் நடைமுறை; இலகுபடுத்துமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

வவுனியா பொது மருத்துவமனையில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு கடுமையான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதால் நோயாளர்களைப் பார்வையிடும் உறவினர் பல்வேறு சிரமங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு பாஸ் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வரும் நிலையில், நோயாளர்களுக்கு 2 பாஸ் வழங்கப்பட்டு ஒரு பாஸை பயன்படுத்தி ஒருவர் மட்டுமே நோயாளியைப் பார்க்க முடியும என்ற நிபந்தனை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தூர பிரதேசத்தில் இருந்து வரும் பார்வையாளரகள தமது சிகிச்சைக்காக தங்கியிருக்கும் நோயாளர்களைப் பார்வையிடுவதில் நாளாந்தம் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாகவும் குறிப்பாக நோயாளியைப பார்க்க முடியாது திரும்பிச் செல்லும் அவல நிலையும் காணபபடுவதாகவும் பொது மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு பாஸ் நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தாலும் ஒரு பாஸை பயன்படுத்தி இரண்டு அல்லது மூன்று பேரைப்பார்வையிட அனுமதி வழங்கப்பட்டால் தூர இடங்களில் இருந்து வருபவர்கள் சிரமமின்றி நோயாளர்களைப் பார்வையிட இலகுவாக இருக்கும் எனவும் இவ் விடயம் குறித்து வைத்தியசாலை ஆவன செய்யவேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 13ஆவது கிளையான சண்டிலிப்பாய் பல நோ.கூ.சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் க.தம்பாபிள்ளை தலைவராகவும், வி.எஸ்.ராஜதுரை உபதலைவராகவும், செ.மகாலிங்கம் செயலாளராகவும்,5 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


☆ ☆ ☆ ☆


சாவகச்சேரி நலன்புரிச் சங்க பொதுக்கூட்டம் அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.


இக் கூட்டத்தில் நடப்பாண்டுக்கான நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது. இதில் செ.சுப்பிரமணியம் தலைவராகவும், க.தம்பிராஜா மற்றும் சுந்தரலிங்கம் உபதலைவராகவும், க.நவரட்ணம் செயலாளராகவும் செ.சதாசிவமூர்த்தி உபசெயலாளராகவும் செ.சிவப்பிரகாசம் பொருளாளராகவும், தெரிவுசெய்யப்பட்டதுடன் 5 நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (11)


# 106 ஆவது வடக்கின் பெரும் போர் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

## சென் ஜோன்ஸ் அணி விபரம்



ஜெ.அட்ரியன்
(அணித் தலைவர்) துடுப்பாட்ட வீரர்



ச.இரஜிந்தன்
(உப தலைவர்) துடுப்பாட்ட வீரர்



ஜெ.அமிதயன்
துடுப்பாட்ட வீரர்


அ.சன்சயன்
துடுப்பாட்ட வீரர்




ஞா.ஆபிரகாம் அனோஜன்
துடுப்பாட்ட வீரர்


ப.துவாரகசீலன்
துப்பாட்ட வீரர்


ந.கிருத்திகன்
துடுப்பாட்ட வீரர்


சி.கவாஸ்கர்
பந்து வீச்சாளர்

(யாழ்ப்பாணம்)


வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாட் களைக் கொண்ட இனிங்ஸ் போட்டி வரும் 08ஆம், 09ஆம், 10ஆம் திகதி களில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.


யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்று வரும் இப்போட்டி 106ஆவது ஆண்டாக நடைபெற வுள்ளது.

இரு அணிகளுக்குமிடையில் கடந்த 1904 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இப் போட்டி, தேசிய ரீதிில் முதனமை பெற்றதுடன் மிகப்பெரும் வரலாற்றைக் கொணடதாகும்.

இப்போட்டித் தொடரில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 34 வெற்றிகளைப் பதிவாக்கி, அதிக தடவைகள் வெற்றி பெற்ற அணி என்ற சிறப்பையும் பெற்றுள்ளது.

அத்துடன் இந்த ஆண்டில் நடைபெற்ற போட்டிகளில் சிறப் பான ஆட்டத்திறனை வெளிப் படுத் தியுள்ளது. எனவே, இந்த 106 ஆவது வடக்கின் பெரும் போர் ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.


த.சஜன்
பந்து வீச்சாளர்



பே.கிருந்தாபன்
பந்து வீச்சாளர்


அ.நிலோஜன்
பந்து வீச்சாளர்



வீ.துஸ்யந்தன்
பந்து வீச்சாளர்



இ.லோகதீஸ்வர்
பந்து வீச்சாளர்


கோ.சுபர்சன்
பந்து வீச்சாளர்


த.கபிலன்
பந்து வீச்சாளர்


ம.விந்தாரகன்
ஆரம்ப பந்து வீச்சாளர்


க.கபில்ராஜ்
இ.கா



# உலகக் கிண்ண கபடி போட்டி இந்திய மகளிர் அணி சம்பியன்

இந்தியாவில் நடைபெற்ற மகளிருக்கான முதல் உலக கிண்ணக் கபடி போட்டியில் இந்திய மகளிர் அணியினர் 25-19 என்ற கணக்கில் ஈரானை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றுள்ளனர்.

கடும் ரசிகர்கள் கூட்டத்துக்கு மத்தியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் இந்திய மகளிர் அணியினர் அற்புதமாக ஆடியதோடு, ஆட்டம் முழுவதையும் தங்கள் வசமே வைத்திருந் தனர். இதனால் முதல் பாதி ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 19-11 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

பின்னர் நடைபெற்ற இரண்டாவது பாதி ஆட்டத்தில் சுதாகரித்துக் கொண்ட ஈரான் வீராங்கனைகள், இந்திய வீராங்கனைகளுக்கு கடும் சவால் அளித்தனர். இருப்பினும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை.

இறுதியில் இந்திய அணி 25-19 என்ற கணக்கில் வெற்றி கணடது. 2ஆவது பாதி ஆட்டததில் இந்தியாவுக்கு 6 புள்ளிகளும், ஈரானுக்கு 8 புள்ளிகளும் கிடைத தன. முன்னதாக அரையிறுதி ஆட்டங்களில் இந்திய அணி 60-21 என்ற கணக்கில் ஜப்பானையும், ஈரான் 46-26 என்ற கணக்கில் தாய்லாந்தையும் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறின.

# ஆசிய கிண்ண பாகிஸ்தான் அணி வீரர்கள்

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணி வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் சோயிப் மாலிக் உட்பட பல முககிய வீரர்கள் இடம்பெறவில்லை.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நான்கு நாடுகள் பங்கேற்கும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி வருகிற 11ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை வங்கதேசத்தில் நடைபெற உள்ளது. வீரர்களின் விபரங்கள் பின்வருமாறு:

மிஸ்பா உல் ஹக் (அணித் தலைவர்), முகமது ஹபீஸ், நசீர் ஜம்ஷெத், யூனிஸ் கான், உமர் அக்மல், ஹம்மத் ஆஸம், ஆசாத் ஷபிக், ஷாகித் அப்ரிடி, அஸார் அலி, சர்பராஸ் அகமது, சயீத் அஜ்மல், அப்துர் ரகுமான், உமர் குல், அய்சாஸ் சீமா, வகாப் ரியாஸ். மாற்று வீரர்கள்: அகமது ஷெசாத், ரஹத் அலி, பிலவால் பட்டி, அபாக் ரகிம்.






காரைநகர்-தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மாணவிகளின் இடைவேளை உடற்பயிற்சியையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி. காரைநகர் பிரதேச அமைப்பாளரும் காரைநகர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவருமான கண்ணன் (றஜனி) உரையாற்றுவதையும் காணலாம்.

# கிளிநொச்சி செயலக ஊழியர்களின் சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டி இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் நடாத்தப்படும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் ஊழியர் களிடையேயான சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று செய்வாய் கிழமை மாலை 1.00 மணிக்கு கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க விளை யாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றுகின்றது.

ஊசி நூல் கோர்த்தல், யானைக்குக் கண் வைத்தல், முட்டியுடைத்தல், போத்தலில் நீர் நிரப்புதல், பணிஸ் சாப்பிடுதல், 100 மீற்றர் ஓட்டம் (40 வயதுக்கு மேல் ஆண்கள்) 100 மீற்றர் ஓட்டம் (40 வயதுக்கு மேல் பெண் கள்), 100 மீற்றர் ஓட்டம் (40வய துக்கு கீழ் ஆண்கள் ), 100 மீற்றர் ஓட்டம் (40 வயதுக்கு கீழ் பெண்கள் பலூன் பாது காத்தல், சம நிலை ஓட்டம் (பெண்கள்), தொப்பி மாற்றம் (கலப்பு), மெதுவான ஈருருளி ஓட்டம் (ஆண், பெண்), அஞ்சல் ஓட்டம் (ஆண்கள்), அஞ்சல் ஓட்டம் (பெண்கள்), அஞ்சல் ஓட்டம் (கலப்பு) கயிறு இழுத்தல் (ஆணகள்), மர்ம மனிதனைக் கண்டு பிடிதல், பொது அறிவுப் போட்டி. என்பன இடம்பெறுகின்றன.

## வடமராட்சி வடக்கில் விளையாட்டு விழா

வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் மாபெரும் விளையாட்டு விழா எதிர்வரும் 17ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (116)



கொழும்பு பொலிஸ் பார்க் மைதானத்தில் நடைபெற்ற தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் பி.பிரிவில் மூன்றாமிடம் பெற்ற வவுனியா மாவட்ட வீரர்கள் கிண்ணத்துடன் நிற்பதைக் காணலாம்.

# தீவக வலயப் பாடசாலை மட்ட கால்பந்து போட்டி முடிவுகள்

தீவக வலயப் பாடசாலை மட்ட கால்பந்து போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் மைதானத்தில் இந்தப் போட்டிகள் இடம்பெற்றிருந்தது.

**15 வயதுப் பிரிவு ஆண்களா**

முதலாமிடம் - ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, இரண்டாமிடம் - அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம், மூன்றாமிடம்- புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு ஆண்கள்**

முதலாமிடம் - ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, இரண்டாமிடம் - நாரந்தனை றோ.க.வித்தியாலயம், மூன்றாமிடம்- வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு ஆண்கள்**


முதலாமிடம் - ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, இரண்டாமிடம் - நயினாதீவு மகாவித்தியாலயம், மூன்றாமிடம்- வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்.(93)

## வலைப்பந்தாட்ட சம்பியன்

தெல்லிப்பளை பிரதேச வலைப் பந்தாட்டப் போட்டி தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் தெல்லிப்பளை யூனியன் விளையாட்டுக் கழகம் இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தை 15:8 என்ற கணக்கில் தோற்கடித்துச் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியது. (93)

## மோட்டார் சைக்கிள் சாகசம்



சர்வதேசப் புகழ்பெற்ற மோட்டார் சைக்கிள் சாகச வீரரான கிறிஸ் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சாகசங்களை நிகழ்த்தினார். கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது. இவர் நான்கு தடவை மோட்டார் சைக்கிள் சாகசப் பந்தயங்களில் சம்பியன் பெற்றவராவர்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சி.சி.தக. பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நா.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் கலந்துகொள்கின்றார், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளருமான ஆ.ரவீந்திர தாஸன், முன்னாள் அதிபர் இ.அருணாச்சலம், கோண்டாவில் இந்து மகாவித்தியாலய அதிபர் க.சண்முககுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கௌரவ விருந்தினர்களாக யாழ். வலய ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாஸன், ஈ.பி.டி.பி சர்வதேச இணைப்பாளர் ம.மித்திரன், கோண்டாவில் ஞானவீர சனசமுக நிலைய தலைவர் லயன் கே.எம். இராஜேந்திரன்,பொதுசுகாதார பரிசோதகர் நா.பிரேம்குமார் மற்றும் தொழில் திணைக்கள நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் பி.விமல்ராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# ராசி பலன் மார்ச் 1-15 வரை..

**கணிப்பவர் பெருங்குளம் ராமகிருஷ்ணன MCA,MA(Ast)**

ஆறாம் வீடு (பாவம்) ரண ருண ரோகஸ்தானம் எனப்படும். தாய்மாமன் பற்றியும் இந்த வீடு உணர்த்தும். கீழா விழுதல், தடைகள், சறுக்கல், சண்டைகள், மனநோய், சிறைவ்சம் முதலியவை பற்றியும் இந்த இடத்திலிருந்து அறிய முடியும்.

நல்ல அம்சங்களைப் பொறுத்தவரை இலாபம், பணி செய்தல் இரண்டையுங்கூட இந்த இடத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

இந்த வீட்டுக்குரிய கிரகம் பலம் பெற்றிருந்தால் நல்லது. ஆனால் லக்னாதிபதியை விட ஆறாம் வீட்டதிபதி பலம் பெற்றிருப்பது நல்லதல்ல.

லக்னம் என்பது 'தான்' ஆறாம் வீடு என்பது 'பகைவன்'. இதிலிருந்து ஓர் உண்மையை நாம் அறிந்து கொள்ளலாம். தன் பகைவனைக் காட்டிலும் தான் பலமாக இருந்தால்தானே பகைவனை முறியடிக்கவும், வெற்றி காணவும் முடியும். ஆறாம் வீட்டதிபதி வலுத்து லக்னேசன் வலுவிழந்து இருந்தால் பகவரிடம் தோற்று அவரது அடிமையாகும் நிலைகூட ஜாதகருக்கு ஏற்படலாம். அதே போல் நோய்ச் சுமையை தாங்கும் சக்தியைக் கூட ஜாதகர் இழக்கக்கூடும். அதே வேளையில் லக்னாதிபதி ஆறாம் வீட்டு அதிபதியைக் காட்டிலும் ஆற்றல் பெற்றிருந்தால் ஜாதகருக்கு நோய் எதிர்ப்புத் தன்மை அதிகரித்துக் காணப்படும். ஆறாம் வீட்டு அதிபதி ஆட்சி உச்சம் பெற்று சுப பார்வை பெற்றிருந்து லக்னாதிபதியும் வலுப்பெற்று இருந்தால் ஜாதகருக்கு நோயற்ற சுக வாழ்வு அமையும். ஆனால் ஆறாம் வீட்டு அதிபதியுடன் பாபக்கிரஹங்கள் சேர்ந்து லக்னத்தில் இருந்தால் காயம் ஏற்பட வாய்ப்புண்டு.

ஆறாம் வீட்டு அதிபதி மறைந்திருந்தாலோ அஸ்தங்கம் ஆனாலோ ஜாதகருக்கு பகைவரை வெல்லும் பராக்கிரமம் ஏற்படும்.

முதலில் ஆறாம் வீட்டில் இருக்கும் கிரகங்களைப் பற்றிய விளக்கங்களைப் பார்ப்போம். அவற்றைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**6 இல் சூரியன்:**

ஜாதகருக்கு பலமுண்டாகும். பகைவரால் அச்சம் உண்டாகும். ஆனால் பகைவரை வெல்லும் ஆற்றல் ஏற்பட்டுவிடும். உயர்வாழ்வு அமையும். செல்வம் சேரும். சிற்றின்ப நாட்டம் அதிகமாகும். கௌரவமான பதவி, அரசு அந்தஸ்துக் கிடைக்கும். மனைவியின் நலம் சிற்சில நேரங்களில் பாதிக்கப்படும். கடுஞ்செலவு ஏற்படக்கூடும்.

**6இல் சந்திரன்:**

ஜாதகருக்கு பகைவர்கள் அதிகமாவார்கள். வயிற்றுவலி காரணமாக உபாதைகள் ஏற்படலாம். பலவீனமான சந்திரன் என்றால் மற்றவர்களின் சொற்களுக்கு அடிபணிய வேண்டி வரும். இந்த நிலையில் உள்ள ஜாதகருக்கு பொருத்தமான ஊழியர்கள் அமைவார்கள். இளமையில் ஜாதகருக்கும் சந்தோஷம் உண்டாகும். பலமான சந்திரன் ஏன்றால் ஜாதகருக்குப் பெருமை, புகழ், பெருந்தன்மை, சுகவாழ்வு எல்லாம் அமைய வாய்ப்புண்டு.

**6இல் செவ்வாய்:**

ஜாதகருக்கு சரீர பலம் ஏற்படும். பகைவரை முறியடிக்கும் வல்லமை உண்டாகும். சிற்றின்ப இச்சை அதிகமாக இருக்கும். ஜீரணசக்தி சரியாக இருக்கும். புகழ் பொருள் சேரும். கொப்புளங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. பணம் நிறையச் செலவாகும். உச்சம் அல்லது ஆட்சிச் செவ்வாய் என்றால் ஜாதகரை செவ்வாய் உயர்த்துவார். உத்தியோகம் முறையாகப் பார்த்து ஜீவனம் செய்வார்கள்.

**6இல் புதன்:**

ஜாதகருக்கு பொதுவில் பகைவர்கள் இருக்க மாட்டார்கள். ஆனால் வாதப்பிரதிவாதங்கள் சச்சரவுகளுக்கு இடமுண்டு. பேச்சு கூர்மையானதாக இருக்கும். சோம்பேறித்தனம் உண்டு. சரீர நோய் உண்டு. க்ஷயம் வருவதற்கும் வாய்ப்புகள் அதிகம். பலமுள்ள புதனாக இருந்தால் 6இல் இருப்பது நன்மையே. இந்த நன்மை முழுமையாகக் கிடைப்பதற்கு சுபகிரகங்களின் பார்வை அவசியம். பலன் பெற்ற புதனால் ஒருவர் தொழிலதிபர் ஆவதற்கு கூட வழியுண்டு.

# குட்டிச் சுட்டி இல்ல மெய்வல்லுநர்

(கோண்டாவில்)

குட்டிச்சுட்டி மகிழ்நெறிக் கல்வி நிலையம் நடாத்தும் மாபெரும் இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப போட்டி நாளை புதன்கிழமை பி.ப.1.30 மணிக்கு யா/ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொள்கின்றார்.

சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமாகிய அ.இரவீந்திரதாசன் கலந்துகொள்கின்றார்.

ஓட்டப் போட்டி நிகழ்வுகளான -

முகர்ந்து பொருள் எடுத்தல், 13 வயதுப் பெண்கள், முகர்ந்து பொருள் எடுத்தல் 11 வயதுப் பெண்கள், சொல்லாக்கம் 9 வயதுப் பெண்கள், ஒத்த உரு எடுத்தல் 9 வயதுப் பெண்கள் அவதானித்து எழுதுதல் 13 வயது ஆண்கள், செவிமடுத்து எழுதுதல் 9 வயது ஆணகள். இடைவேளை உடற்பயிற்சி என்பனவும் இடம்பெறவுள்ளன.

# ஆண்கள் கூடைப்பந்தாட்டம்

உடுவில் பிரதேச ஆண்கள் கூடைப் பந்தாட்டப்போடடி சுன்னாகம இராமநாதன் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

உடுவில் மத்தி விளையாட்டுக்கழகம் இணுவில் இந்து விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடி 38:20 என்ற அடிப்படையில் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.(93)

# சாட்சிகளைப் பாதுகாக்க விரைவில் சட்டமூலம் அமுல்

(கொழும்பு)

பொறுப்புக் கூறுதல் தொடர்பாக அமெரிக்கா உட்பட உலக சக்திகள் பலவற்றின் அழுத்தங்களுக்கு மத்தியில், சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான சட்டமூலம் விரைவில் சட்டமாக்கப்படும் என சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடர் நடைபெறும் நிலையில் ஜெனவாவிலுள்ள பல்வேறு தூதரகங்கள், சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட சர்வதேச அமைப்புகள், உலக தமிழர் பேரவை, மனித உரிமைகளுக்கான தமிழர் மத்திய நிலையம் போன்ற அமைப்புகளுடன் இலங்கை அரசாங்கத்தின் தூதுக்குழுவினர் கூட்டமொன்றை நடத்தினர்.

அக்கூட்டத்தின்போது சர்வதேச மன்னிப்புச் சபை பல கேள்விகளை எழுப்பியது. அக்கேள்விகளுக்கு நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் பதிலளிக்கையில், சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்படும் என்றார். வீடியோ மூலம் அளிக்கப்படும் சாட்சியங்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதை இச்சட்டமூலம் எதிர்பார்க்கிறது.

வீடியோ மாநாட்டு முறை மூலம் சாட்சியமளிக்கப்படும்போது அத்தகைய தகவல்களின் நம்பகத்தன்மை குறித்து கரிசனைகள் எழ முடியும். வேறொரு இடத்திலிருந்து சாட்சிமளிக்கப்படும் போது பின்னணியிலுள்ள எவராலும் வற்புறுத்தலுக்குள்ளாக்கப்பட சாத்தியமுள்ளது. உத்தேச சட்டமூலத்தில் இவ்விடயங்கள் ஆராயப்பட்டு அத்தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

இச்சட்டமூலம் 2008 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் பின்னர் விவாதமொன்றில இது குறித்து மேலும் கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டது. தற்போது சட்ட வரைஞர் திணைக்களம் இச்சட்டமூலத்தை வரைவதற்கான இறுதிக்கட்ட பணிகளில் ஈடுபட்டுள்ளது.

# ஒரு மாத காலத்திற்குள் 6 குழந்தைகள் உயிரிழப்பு



(கொழும்பு)

காலி - மஹமோதர வைத்தியசாலையின் விசேட குழந்தைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மற்றுமொரு குழந்தை உயிரிழந்துள்ளது.

கடந்த ஒரு மாத காலப் பகுதிக்குள் காலி - மஹமோதர வைத்தியசாலையின் விசேட குழந்தை சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஆறு குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

கடந்த சில தினங்களாக கவலைக்கிடமான நிலையிலிருந்த சிசுவொன்றே நேற்றுமுன்தினம் உயிரிழந்ததாக வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் டாக்டர் ருக்ஸான் பெல்லன குறிப்பிட்டார்.

இந்த உயிரிழப்பிற்கான காரணத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் அறிந்துகொள்ள முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

வைத்தியசாலையின் விசேட குழநதைப் பிரிவில் வழங்கப்பட்ட ஊசி மருந்துள்ள குப்பியொன்றில் கிருமிகள் காணப்பட்டமை பரிசோதனைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பதில் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தித் திட்ட விவகாரம் முஸ்லிம் காங்கிரஸுடன்பேச்சு

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கும் அதன் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான விசேட பேச்சுவார்த்தையொன்று இன்னும் ஒரு சில தினங்களில் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புறக்கணிக்கப்படுவதாக நேற்றுமுன்தினம் தியத்தலாவ பாதுகாப்புக் கல்லூரியில் இடம்பெற்ற அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனையடுத்தே, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் பேச்சு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைசசர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எம்.ரி.ஹசன் அலியின் அபிவிருத்தித் திட்டங்கள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் குறித்த கூட்டத்திற்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இந்நிலையிலேயே இந்த பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்தில் பாலியல் சேட்டை; இலங்கை இளைஞர் சிறைவாசம்

(கொழும்பு)

ஒரு சமூக வலைப்பின்னல் தளம் மூலமாக இரு சிறுமிகளை நண்பர்களாக்கி அவர்கள் மீது பாலியல் சேஷ்டை புரிந்த 19 வயது இலங்கை இளைஞர் ஒருவர் நியூசிலாந்தில் மூன்று மாத வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிறிஸ்சேர்ச் மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ள தகவலில்,

19 வயதுடைய இலங்கை இளைஞன் நியூசிலாந்தின்-கிறிஸ்சேர்ச்சில் கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி இடம்பெற்ற புவி நடுக்கத்தின் பின் அங்கு சென்றுள்ளார்.

கிறிஸ்சேர்ச்சில் தனக்குப் பழக நண்பர்கள் வேண்டும் என நினைத்து 14 வயதுடைய இரு சிறுமிகளை சமூக வலைத்தளம் மூலம் நண்பர்களாக்கிக் கொண்டுள்ளார். அவர்களுடன் தன்னுடன் உறவு வைத்துக்கொள்ளுமாறு தொலைபேசியில் குறுந்தகவல்களையும் அனுப்பியுள்ளார்.

நன்கு நண்பர்களான இவ்விரு சிறுமிகளையும் ஒரு நாள் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு மதுபானம் அருந்தக் கொடுத்து பாலியல் சேஷ்டை புரிந்துள்ளார்.

# மட்டக்களப்பில் மர்மமாக இளைஞன் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கரடியனாறுப் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த இளைஞரொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த நபர் செங்கலடிப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய நபரென அடையாளம் காணப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைக்காக சடலம் செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த மூன்றாம் திகதி முதல் குறித்த இளைஞர்

# மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வேண்டுமென்கிறது பிள்ளையானின் கட்சி

(கொழும்பு)

மத்திய அரசாங்கத்திடம் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக பொலிஸ் அதிகாரம் இருக்கக் கூடாதெனவும், எனவே அந்த அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கும் வழங்கப்பட வேண்டுமெனவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளதாவது,

13 ஆவது திருத்தச் சட்டம் அமுல் படுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைக்கு வழங்கப்படவேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாகும்.

உடனடியாக பொலிஸ் அதிகாரங்களைப் பகிர முடியாவிட்டால், பிரதேசத்தின் பொலிஸ் விவகாரங்களில் மாகாண அரசாங்கத்துடன் மத்திய அரசாங்கம் கலந்துரையாட முடியும்.

குறிப்பாக பொலிஸ் மோட்டார் போக்குவரத்துப் பிரிவிற்கான நியமனங்களில் மாகாண சபையின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது.

இதேவேளை, இலங்கையின் உள் விவகாரங்களில் வெளிச் சக்திகள் தலையீடு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அரசாங்கத்தின் முனைப்புக்களுக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி பூரண ஆதரவளிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கடனை மீளச் செலுத்த முடியாதுள்ளது அரசு


(கொழும்பு)

அரசாங்கம் கடன் தொகைகளை மீளச் செலுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது என பொருளியல் ஆய்வாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உத்தேச மொத்த வரி வருமானம் 900 பில்லியன் ரூபா என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், கடன் தவணை மற்றும் வட்டிக்காக 940 பில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் வருமானம் கடன்களை மீளச் செலுத்தப் போதுமானதாக அமையவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கருத்துக்கள் பொய்யானவை என அரசாங்கத்தைச் சேர்ந்த எவரேனும் தெரிவித்தால், அவருடன் பகிரங்க விவாதம் நடத்தத் தயார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




நாய் வளர்ப்பாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நாய்கள் கண்காட்சி நேற்று முன்தினம் விஹாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்றது. இதன்போது நாய்களுக்கான போட்டிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வட, கிழக்கில் படைக்குறைப்பு இல்லை என்கிறது இராணுவம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் இருந்து படையினரின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ளும் திட்டம் தற்போது ஏதும் இல்லையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிகால் ஹப்புஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், விரைவில் இராணுவக் கட்டமைப்பு மீளமைப்புச் செய்யப்படும் போதே, அங்குள்ள படையினரின் எண்ணிக்கை குறைக்கப்படக்கூடும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

போருக்குப் பின்னர் சில பற்றாலியன்கள் வெறுமையாகி முற்றாகச் செயற்படாமலுள்ளன.

இந்தப் பற்றாலியன்களை வலுப்படுத்தும் வகையில், இராணுவத்தில் அவ்ற்றை மீளமைப்புச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.


இதன்போது இயல்பாகவே பல பகுதிகளில் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைவடையும், வேறு சில பகுதிகளில் அதிகரிக்கும்.

இந்த மீளமைப்பு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தாது முழுநாட்டிலும் இடம்பெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைக்கப் போவதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜயசூரிய அறிவித்திருந்தார்.

குறிப்பாக போரில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற படையினரை குறிப்பிட்ட சில கேந்திர நிலைகளில் பாதுகாப்பில் ஈடுபடுத்திக் கொள்ளப் போவதாவும் ஏனைய படையினரை அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்தப் போவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

# கந்தரோடை கந்தையா வித்தியாலயத்திற்கு இருமாடிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்



(யாழ்ப்பாணம்)

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியசாலையின் புதிய இரண்டுமாடிக் கட்டடத்தினை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த முதலாம் திகதி இடம் பெறறது.

இதில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து ஆளுநர் உரை நிகழ்த்தும் போது, இப்பாடசாலையின் அபிவிருத்திக்காக தனது நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவனை உடனடியாக வழங்குவதாகத் தெரிவித்ததுடன், மேலும் இங்கு ஆய்வு கூட வசதிகளை விரைவில் ஏற்படுத்தித் தருவதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து ஆளுநர் 137 மாணவர்களுக்கு காலணிகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதிப் பிரதம செயலாளர் திட்டமிடல் இ.உமாகாந்தன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன், மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, வடமாகாண வேலைபகுதிப் பணிப்பாளர், யாழ்.வலய வேலைப் பகுதிப் பொறியியலாளர், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பாடசாலையை மூடிவிட்டு கூட்டத்திற்கு செல்லும் அதிபர்

(கிளிநொச்சி)

துணுக்காய் - உயிலங்குளம் அ.த.க.பாடசாலையில் ஓர் ஆசிரியர் மட்டுமே பணியிலிருப்பதன் காரணமாக வலய மட்டம், கோட்ட மட்டங்களில் நடைபெறும் கூட்டங்களுக்குப் பாடசாலையை மூடிவிட்டு அவர் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். ஓர் ஆசிரியரே அதிபரின் வேலையையும் புரியும் நிலையுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்தில் மிகவும் பின்தங்கிய கிராமத்தில் உள்ள இந்தப் பாடசாலையில் மேலதிகமாக ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புக்களை இந்தப் பாடசாலை கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்பகுதியில் உள்ள முன்பள்ளி நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றது. 30 வரையான சிறார்களுடன் பொது மண்டபம் ஒன்றில் இந்த முன்பள்ளி இயங்கி வருகின்றது. மேலும் அம்பலப் பெருமாள் குளப் பகுதியிலும் முன்பள்ளி நிரந்தரக் கட்டடம் இன்றி இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதி மீள்குடியமர்வு இடம்பெற்ற பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆரம்பப் பிரிவை தனித்து இயக்க அதிகாரிகளிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு (தரம் 1-5) பாட்சாலையினைத் தனித்தியங்க அனுமதிகோரி பாடசாலைச் சமூகம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆரம்பப் பிரிவு பாடசாலையின் நிர்வாகத்தைத் தனித்தியங்க அனுமதிப்பதன் மூலம் ஆரம்பக் கல்வியினை நல்ல முறையில் கட்டியெழுப்பலாம் என பாடசாலைச் சமூகம் கருதுகிறது.

பாடசாலைச் சமூகத்தின் இக்கோரிக்கை வலயக் கல்விப் பணிப்பாளரால் மேல் நடவடிக்கைக்காக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (06)

# குப்பைகளால் நிரம்பி வழியும் செம்மணி வீதிப் பகுதி

(யாழ்ப்பாணம்)

செம்மணி வீதியில் ஏ - 9 வீதியிலிருந்து நாயன்மார்க்கட்டுச் சந்தி வரையான பகுதி தற்பொழுது கழிவுகளால் நிரம்பி வழியும் இடமாக மாறி வருவதாகப் பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வீதி சேதமான நிலையிலிருந்து கடந்த வருடம் காப்பெற் வீதியாக மாற்றப்பட்டு போக்குவரத்துக்கு இலகுவாக்கப்பட்டுள்ளது. வீதியின் இரு பக்கமும் நெல் வயல்கள் இருப்பதனால் இயற்கையில் மிக அழகானதாக இருக்கும் நிலையில் உல்லாசப் பயணிகளும் இவ்விடத்தை தினமும் வந்து பார்த்து இரசிக்கின்றனர்.

தற்போது இவ்வீதியில் பல இடங்களிலிருந்து வரும் குப்பைகள், மிருகக் கழிவுகள் என பெருந்தொகையான கழிவுப் பொருட்கள் இங்கு கொட்டப்படுகின்றன. அவை வீதிகளிலும் வயல்களிலும் பரவிக் காணப்படுதுடன் இவற்றிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது.

எனவே இவ்விடயத்தை உரியவர்கள் கவனத்தில் எடுத்து உடனடி நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## அநாதரவான நிலையில் குழந்தை மீட்கப்பட்டது

(யாழ்.நிருபர்)

காரைநகரில் மக்கள் குடியிருக்காத வெற்றுக்காணி ஒன்றிலிருந்து பிறந்து மூன்று வாரங்கள் மதிக்கத்தக்க சிசு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்குப் பின்புறமாக அமைந்துள்ள மொந்திபுலத்தில் ஆள்களற்ற வளவு ஒன்றில் குழந்தை அழும் சத்தம் கேட்ட சிறுவன் ஒருவன் அங்கு சென்று பார்த்தபோது பிஞ்சுக் குழந்தை ஒன்று அநாதரவாகக் கிடக்கக் காணப்பட்டது.

அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சிறுவன் கொடுத்த தகவலறிந்து அங்கு சென்ற மருத்துவமனை ஊழியர்கள் அநாதரவாகக் கிடந்த பெண் சிசுவை மீட்டு வந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஊர் காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (10)

# ஒட்டுசுட்டான் பொது இடங்களில் மலசலகூட வசதிகள் இல்லை

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு-ஒட்டுசுட்டான் சந்திப் பகுதியில் முன்னர் அமைக்கப்பட்டிருந்த மலசல கூடங்கள் கவனிப்பாரற்று பற்றைகள் மூடிக் காணப்படுவதால், பிரயாணங்களை மேற்கொள்பவர்கள் இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்கு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அதிகமான பிரயாணிகள் அருகிலுள்ள பற்றைகளையே நாடுகின்றனர்.

ஒட்டுசுட்டான் பிரதான சந்தியிலும் மலசலகூட வசதிகள் இல்லாததால் அங்கு கூடும் மக்களும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர். இந்தச் சந்தியில் பல்வேறு இடங்களுக்குப் பஸ்களில் செல்வதற்காக ஏராளமான பயணிகள் கூடுவது வழக்கமாகும்.

இவர்கள் நெடுங்கேணி, முல்லைத்தீவு, மாங்குளம், வவுனியா எனப் பல இடங்களுக்கும் இங்கிருந்து செல்கின்றனர். ஆனால் இவர்களுக்கென மலசலகூட வசதிகள் இங்கில்லை. ஏற்கனவே இங்கு அமைக்கப்பட்ட இரு மலசலகூடங்கள் கவனிப்பாரற்று பற்றைகள் மூடிய நிலையில் காணப்படுகின்றன.

பிரதேச சபையினர் இவ்வாறான மக்களின் சிரமங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளும் இந்தச் சந்தியில் இறங்கி நிற்கும் போது இதே பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். உடனடியாகப் பிரதேச சபையினர் இந்த மலசல கூடங்களைப் புனரமைத்து மக்களின் பாவனைக்கு உதவவேண்டுமென பலரும் கோரிக்கை விடுக்கின்றனர்.





யுத்தத்தினால் சேதமடைந்த பூநகரி-மண்டைக்கல்லாறு புனித அந்தோனியார் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு அதன் திறப்பு விழா கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்தப் புதிய ஆலயத்தை யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திறந்து வைத்தார். இதில் ஆயர் வரவேற்கப்படுவதையும், புதிய ஆலயத் தோற்றத்தையும் காணலாம். (21)

# மன்னார்-தரவன்கோட்டை கிராமத்தில் புதிய பாடசாலை அமைக்க கோரிக்கை

(மன்னார்)

மன்னார்-தரவன்கோட்டை கிராமத்தில் நிரந்தரமாகப் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு அக்கிராமத்தில் உள்ள மாதர் அபிவிருத்திச்சங்கம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன கோரிக்கை விடுத்துள்ளன.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எழுத்தூர் கிராம அலுவலகர் பிரிவில் தரவன் கோட்டை கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் சுமார் 700 குடும்பங்கள் வரை வாழ்ந்து வருகின்றன. இக்கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் இவர்கள் சுமார் 3.5 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மன்னார் நகர் பாடசாலைகளுக்கு சிரமத்திற்கு மத்தியில் சென்று வருகின்றனர்.

தரவன்கோட்டை கிராமத்தில் உள்ள மக்கள் சுய தொழில் உற்பத்திகளின் மூலம் தமது வருமானத்தை தேடிக்கொள்ளுகின்றனர். இக்கிராமத்திற்கு உரிய நேரத்தில் அரச, தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுவதும் இல்லை. இதன் காரணமாக தமது பிள்ளைகளை தனியார் வாகனங்களில் அதிக பணம் செலுத்தி பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். கஷ்ட நிலையில் உள்ள இம்மக்கள் மாதாந்தம் போக்குவரத்துச் செலவுகளுக்காக பல ஆயிரம் ரூபாய் பணத்தை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, முதற்கட்டமாக இக்கிராமத்தில் தரம் 01 முதல் 5 வரையான வகுப்புக்களை கொண்ட பாடசாலை ஒன்றை உடன் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் பாரூக்கிடம் அவர்கள் தமது கோரிக்கை மனுவை கையளித்துள்ளனர்.

# வைத்தியர்களுக்கிடையே முரண்பாடு கர்ப்பிணிகள் அனுமதி இடைநிறுத்தம்

வைத்தியர்களுக்கிடையிலான முரண்பாடு காரணமாக கஹவத்தை ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்றுக்காக கர்ப்பிணித் தாய்மார்களை அனுமதித்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. வைத்தியசாலையின் மகப்பேற்று விசேட வைத்தியருக்கும் ஏனைய வைத்தியர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள தொழிற்சார் பிரச்சினை இதற்கு காரணமென வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் கவலைக்கிடமான நிலையில் இருக்கும் கர்ப்பிணித் தாய்மார்கள் மாத்திரம் மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்படுவதாக வைதத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திஸ்ஸ பெரேரா தெரிவித்தார்.

அவ்வாறான கர்ப்பிணிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு வைத்தியர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதாக அவர் கூறினார். கஹவத்தை ஆதார வைத்தியசாலையில் காணப்படும் இந்தப் பிர்ச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதார பிரதியமைச்சர் லலித் திஸாநாயக்கவிடம் தெரிவிக்கையில், பிரச்சினை தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்படும்போது விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.



# நாறும்பூநாதன் நூல்வெளியீடு


நாறும்பூநாதன் என்ற பெயரில் எழுத்தாளர் ஒருவர் இருக்கிறார் என்னும் செய்தியே எனக்கு ஓராண்டுக்கு முன்னர்தான் தெரிய வந்தது. சொன்னவர் நாஞ்சில் நாடன் சித்தப்பா. திருப்புடைமருதூர் சிவபெருமானின் பெயரான நாறும்பூநாதனின் பெயரை வைத்துக் கொண்டு ஒரு மனிதர் நடமாடுகிறார் என்ற செய்தியும், அதிலும் அவர் எழுதுகிறவர் என்கிற கூடுதல் தகவலும் என்னை ஆச்சரியப்படுத்தின.

நாறும்பூநாதனை நான் கேள்விப்பட்டிருந்த சில மாதங்களிலேயே என்னைப் பார்க்க வந்திருந்தார். இரண்டு நாள் பயணமாக திருநெல்வேலி சென்றுவிட்டு சென்னைக்குக் கிளம்பிக் கொண்டிருந்த என்னை அவர் வந்து சந்தித்த போது, ஆனந்த விகடனில் நான் 'மூங்கில் மூச்சு' தொடர் எழுதிக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில்தான் அவர் என்னுடைய 'தாயார் சன்னதி' புத்தகத்தையும் படித்து முடித்திருந்தார்.

முதன்முதலில் சந்தித்தபோது எங்கள் இருவரையுமே இணைத்தது 'கூச்சம்'. தன் 'பளபளக்கும்' தலை குனிந்து அவரும், கண்ணை மறைக்கும் சிகை ஒதுக்கி நானும் அவ்வப்போது ஒருவர் முகம் மற்றவர் பார்த்து ஒரு சில வார்த்தைகள் பேசிக் கொண்டோம்....

★★ ★★ ★★

மேடையில் 'திருவுடையான்' தபலா வாசித்துக் கொண்டே அருமையாகப் பாடிக் கொண்டிருந்தார். மூன்று வருடங்களுக்கு முன்பு மதுரை புத்தகக் கண்காட்சியின்போது திருவுடையானின் கச்சேரியைக் கேட்டு ரசித்து, அவரிடம் பேசிக் கொண்டிருந்த ஞாபகம் வந்தது. தாளவாத்தியம் வாசித்துக் கொண்டே


ஜா. நாறும்பூநாதனின் ஜமீலாவை எனக்கு அறிமுகப்படுத்தியவன் நூல் வெளியீட்டு விழா

பிப்ரவரி 4, 2012

பாடுவது என்பது லேசுப்பட்ட காரியமல்ல. முயன்று பார்த்தால்தான் தெரியும். பலமுறை முயன்று கேவலப்பட்டிருக்கிறேன். (அதேபோலத்தான் ஒரு கையில் மணியும், மற்றொரு கையில் தீபாராதனையும் காட்டுவது. முயன்று பார்த்துவிட்டு சொல்லுங்கள்). திருவுடையானைப் பற்றி ஒருமுறை இளையராஜா அவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். 'ஸார், திருவுடையான்னு ஒரு பாடகர். கம்யூனிஸ்ட் கட்சி மேடைகள்ல...' நான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இடைமறித்து, 'ஆங், தெரியும். 'விருமாண்டி' படத்துல 'கருமாத்தூர் காட்டுக்குள்ளே' பாட்டு பாட வச்சிருந்தேனே' என்றார்...

★★ ★★ ★★

தி.க.சி தாத்தா, 'தேநீர்' நாவலாசிரியர் டி.செல்வராஜ் ஐயா, வண்ணதாசன் அண்ணாச்சி, எழுத்தாளர் கீரனூர் ஜாகீர் ராஜா, எழுத்தாளர் உதயசங்கர் போன்றோருடன் மேடையில் உட்கார்ந்திருக்கும் போது மனதுக்குள் தயக்கமாகவே இருந்தது. அசல் எழுத்தாளர்களான இவர்களுடன் சரிசமமாக என்னையும் உட்கார வைத்திருக்கிறார்களே என்கிற சங்கோஜம் விழா முடியும்வரை என் மனதைவிட்டு அகலவே இல்லை. இந்த விழாவில் தோழர் பவா செல்லத்துரையும், அவரது துணைவியார் கே.வி.சைலஜாவும் கலந்து கொள்வதாக இருந்தது. அவர்கள் இருவருமே எனக்கு தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் வழி உறவுக்காரர்கள். நேரில் சந்திக்கக் காத்திருந்தேன். விழாவன்று காலையில்தான் அவர்கள் வரவில்லை என்னும் செய்தியை நாறும்பூநாதன் சொன்னார். குறிப்பாக தோழர் பவா செல்லத்துரையைச் சந்திக்க அதிகம் விரும்பினேன். காரணம், புகைப்படங்களில் அவரைப் பார்க்கும் போது என்னைவிட அவர் நிறம் என்று தோன்றுகிறது. அருகருகில் அமர்ந்து டெஸ்ட் செய்து பார்க்கும் வாய்ப்பு நழுவிப் போனதில் வருத்தம்தான்...

★★ ★★ ★★

ஒவ்வொருவர் பேச்சிலுமிருந்து ஒவ்வொரு வரியை உருவி குத்துமதிப்பாகப் பேசி சமாளித்து விடலாம் என்ற யோசனையில் சிந்திப்பது போன்ற பாவனையுடன் அமர்ந்திருந்த என்னை அநியாயத்திலும் அநியாயமாக முதலிலேயே பேச அழைத்து விட்டார்கள். நான் உட்கார்ந்திருந்த இருக்கையிலிருந்து மைக் இருக்கும் இடத்துக்கு ஒருமாதிரியாக நீந்திச் சென்றடைந்தேன். "ஜமீலாவை எனக்கு அறிமுகப் படுத்தியவன்" நூலை எழுதிய நாறும்பூநாதனை எனக்கு அறிமுகப் படுத்தியவர் எழுத்தாளர் நாஞ்சில் நாடன் அவர்கள்" என்று நான் பேசிய முதல் வரி மட்டும்தான் என் காதில் விழுந்தது. என் பேச்சுக்கு நடுவே நான்கைந்து இடங்களில் கைதட்டலெல்லாம் கூட கேட்டது. என்ன பேசினேன் என்றுதான் தெரியவில்லை.

தோழர் நாறும்பூ வீடியோ ஏற்பாடு செய்திருந்தாரா என்று கவனிக்கவில்லை. ஒருவேளை எடுத்திருந்தால் அதைப் பார்த்து நான் பேசியதைத் தெரிந்து கொள்ள ஆவல். ஒரு எழுத்தாளனை ஊக்குவிக்கும் விதமாக மிகச் சரியான வார்த்தைகளை தேர்ந்தெடுத்து தி.க.சி தாத்தாவிலிருந்து அனைவருமே பேசினார்கள். அநேகமாக எல்லோருமே எழுதி கையோடு கொண்டு வந்திருந்த குறிப்புகளுடன் பேசினார்கள். அதுவும் கீரனூர் ஜாகீர் ராஜா ஒரு முழுநீள கட்டுரை எழுதி வந்து குரல் நடுங்க வாசித்து



முடித்து, என்னருகில் அமர்ந்து ஒட்டுமொத்த மேடையையும் லேசாகக் குலுக்கினார். "நாறும்பூ ரெண்டாம் புஸ்தகம் எளுதியிருக்கதெ எனக்கு இன்னைக்குதானெ தெரியும்" என்கிற விதமாக தோப்பில் மீரான் அண்ணாச்சி படு இயல்பாகப் பேசினார்.

- சுகா குறிப்புகளிலிருந்து.

# நடிகைக்காகவே பிறப்பெடுத்த கேள்விகள்

- தமிழ்மகன்

மோகன் ஸ்ருடியோவில் 'சில்க்' ஸ்மிதா ஏதோ படத்துக்காக நடித்துக் கொண்டிருந்தார். அவரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டேன். அவ்வளவாகக் கெடுபிடி இல்லாமல் பேசினார். பேட்டி என்றால் பொதுவாக "இத்தனாம் தேதி இந்த இடத்துக்கு இத்தனை மணிக்கு வாங்க" என்பார்கள் பலரும். ஆனால் இவரோ தன் தொடையை மறைக்கும் விதமாக ஒரு சின்னத் துண்டைப் போர்த்திக் கொண்டு "கேளுங்க" என்றார் சாதாரணமாக.

என்னிடம் கைவசம் கேள்விகள் எதுவும் இல்லை. வாய்பாடான கேள்விகளாகக் கேட்டேன். "இப்போது என்ன படங்களில் நடிக்கிறீர்கள்" என்பது என் முதல் கேள்வி. அப்போது அவர் நடித்துக் கொண்டிருந்த நான்கைந்து படங்களின் பெயர்களைச் சொன்னார். "என்ன வேடத்தில் நடிக்க விரும்புகிறீர்கள்" என்பது என் இரண்டாவது கேள்வி. "பிச்சைக்காரியா நடிக்கணும்னு ஆசை" என்றார். "உங்களுக்குப் பிடித்த நடிகை யார்" என்று மூன்றாவது கேள்வி. "சாவித்திரி".

அவ்வளவுதான் பேட்டி. வண்ணத்திரை போன்ற குட்டிப் பத்திரிகையிலேயே அரைப் பக்கத்துக்கு மேல் அதை இழுக்க முடியாது. அப்படியொரு ரத்தினச் சுருக்கப் பேட்டி அது.

நடிகைகளிடம் நீங்கள் நடிக்க விரும்பும் கேரக்டர் என்று கேட்டால் பிச்சைக்காரியாக நடிக்க விரும்புகிறேன் என்பதும் பைத்தியக்காரியாக நடிக்க விரும்புகிறேன் என்பதும் அப்போது பேஷனாக இருந்தது. கவர்ச்சியாக நடிப்பீர்களா என்றால் கவர்ச்சியாக நடிக்க மாட்டேன். ஆனால் கிளாமராக நடிப்பேன் என்பார்கள். இதெல்லாம் நடிகைகளின் ரெடிமேட் பதில்கள். நாங்களும் இந்தப் பதில்களை விடாமல் கேட்டுப் பிரசுரித்துக் கொண்டிருப்போம். வாசகர்களும் "நடிகை... யின் பதில் அபாரம்" என்று, வாசித்துக் கடிதம் எழுதுவார்கள். சங்கிலித் தொடர் போன்ற பழக்கம்போல இதைச் செய்து கொண்டிருந்தோம். ஆனால் அவர், அவருடைய தொடர்ச்சியான வேடங்கள் குறித்து அதிருப்தியாகத்தான் இருந்தார் என்று பிறகு தெரிந்தது.



வித்தியாசமாக நடிக்க வேண்டும என்று அவருக்கு ஆசை இருந்தது. ஆனால் அவர்மீது இருந்த முத்திரை கடைசிவரை மறையவே இல்லை. அவரை அரைகுறை ஆடையுடன் ஆடுவதற்குத்தான் அழைத்தார்கள். சமீபத்தில் கலைநிகழ்ச்சிகள் நடத்தும் கடையம் ராஜுவைச் சந்தித்தபோது "அனாதை ஆச்சிரமங்களுக்காகக் கலை நிகழ்ச்சி நடத்துவதாக இருந்தால் நான் இலவசமாகவே நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறேன்" என்று சில்க் ஸ்மிதா அவரிடம் சொல்லியிருந்ததைக் கூறினார்.



அவர் சொன்ன சில பதில்கள் உண்மையானவையாகவும் இருந்தன என்று முடிவு செய்வதற்கு சமயத்தில் அந்த நபர் உயிரையும் தர வேண்டியிருப்பதாகத் தோன்றுகிறது.

தற்கொலை என்பது சமூகத்துக்குத் தரும் தண்டனை என்பார்கள். பல நேரங்களில் தங்களை நம்ப வைப்பதற்காகச் செய்கிற கடைசிக் கட்ட முயற்சியாகவும் அது இருக்கிறது. சில்க் ஸ்மிதாவை எத்தனை பேர் நம்பினார்கள் என்று தெரியவில்லை. அவருடைய பிணம் ராயப்பேட்டை மருத்துவமனையில் அந்தப் "பட்டு" மேனி கேட்பாரற்றுக் கிடந்தபோது அவருடைய கடைசிமுயற்சியும் தோற்றுப் போனதாகவே தெரிந்தது.

■■■ ■■■

சில்க் ஸ்மிதாவிடம் கேட்டது மாதிரி பல நேரங்களில் கேள்வி கேட்கத்தான் வேண்டியிருக்கிறது. அந்த விதத்தில் சில நடிகைகள் பிரமிக்க வைக்கவும் செய்திருக்கிறார்கள். அப்படி பிரமிக்க வைத்த ஒரு நடிகையைத் தெரிந்து கொள்வதற்கு முன்... பொதுவாக நடிகைகள் எப்படிப் புரிந்து கொள்ளப்படுகிறார்கள் என்று பார்ப்போம்.

நடிகைகள் என்றதும் ஆணாதிக்கத்தோடு இன்னும் கொஞ்சம் வக்கிரம், கொஞ்சம் அலட்சியம், கொஞ்சம் கவர்ச்சி ஈர்ப்பு எல்லாம்தான் கலந்து கொள்கிறது.

நம் இயக்குநர்களும் அவர்களை அப்படித்தான் பார்க்கிறார்கள். அவர்கள் குறைவான உடையோடு குலுங்கிக் குலுங்கி ஓடுவதற்காகவே பிறந்தவர்களாகப் பாவிக்கிறார்கள்.

நடிகைகளை வெறியுடன் காமுகிக்கும் எந்திரம் போலச் சித்திரிப்பதில் சினிமாத்துறையினரும் அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள். மக்களுக்கு அவர்கள் கனவுக் கன்னிகளாக மாறவேண்டும் என்பது தலைவிதி... அல்லது தலையாயவிதி. அப்படிக் கனவுக்கன்னியாக நாம் திகழவேண்டும் என்று சம்பந்தப்பட்ட சில நடிகை களே விரும்புவது வேறு.

இதில் பத்திரிகையாளர்கள் இந்த இருதரப்புக்கும் இடையே தங்கள் பங்களிப்பைச் செலுத்த வேண்டியதாக இருக்கிறது.

நடிகைகள் என்றால் எப்போ கல்யாணம், காதல் கல்யாணமா, கவர்ச்சியாக நடிப்பீர்களா, உங்களுக்கும் அவருக்கும் இதுவாமே, நடிக்க வராமல் இருந்தால் என்ன செய்து கொண்டிருப்பீர்கள், (யாரைப் பிடித்து) எப்படி நடிக்க வந்தீர்கள், உங்களுக்குப் பிடித்த ஹீரோ யார், கல்யாணம் ஆன பிறகும் நடிக்க வருவீர்களா, நம்பர் ஒன் நடிகை ஆவது எப்போது, எதற்காக நாய் வளர்க்கிறீர்கள்? (நான் சில்க்கிடம் கேட்ட கேள்விகளையும் சேர்த்துக் கொள்ளலாம்) இந்தக் கேள்விகளைத் தவிர்த்துவிட்டு கேள்விகேட்ட தமிழ் நிருபர் யாரேனும் இருந்தால் அந்தத் தனித் தன்மைக்காக அவரை நோபல் பரிசுக்குக்கூட சிபாரிசு செய்யலாம்.

நடிகை ஜோதிர்மயி என்னை ஆச்சரியப்படுத்திய நடிகை. என்ன மாதிரி பொழுது போக்குவீர்கள் என்று கேட்டேன். படிப்பேன் என்றார். இப்போது படித்துக் கொண்டிருக்கிற புத்தகம் என்ன என்றேன். கப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ்ஸின் ஹண்ரட் இயர்ஸ் ஆ.ப் சாலிட்யூட் என்றார். தொடர்ந்து அவர் லத்தீன் அமெரிக்கப் புனைவுலகம் பற்றி படபடவெனப் பேச ஆரம்பித்துவிட்டார். நான் இந்தக் கேள்விக்கு முந்தைய கேள்வி வரை அவரை எப்போ கல்யாணம் டைப்பில்தான் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தேன். சட்டென அவமானமாகிவிட்டது எனக்கு.

உருவு கண்டு எள்ளாமை வேண்டும் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். தொழில் கண்டும் எள்ளாமை வேண்டும். இதையும் எங்காவது சொல்லியிருப்பாரோ என்னவோ?

## நானும் சைத்தானும்



தேவனுக்கு உரியதை தேவனுக்கும்
தேசத்திற்கு உரியதை அதற்கும்
தந்துவிட நான் முன்வந்தபோது
ஒருவன் என்முன் வந்து கூறினான் :
"எனக்கு உரியதை என்னிடம் கொடு"
"யார் நீ?" என்றேன்.
"தெரியாதோ சைத்தானை?" என்றான்.
"அப்படியானால் கேட்டுக் கொள்,
என்னுடையது எல்லாமே எனக்கு மட்டும்
என்பதுவே இன்றுமுதல் எனது வேதம்!"
சைத்தான் உரக்கச் சிரித்தான்.
என்னை சிக்கென்று கட்டிப்பிடித்தான்
என் காதில் மெல்லச் சொன்னான் :
"எனக்கு வேண்டியதைத்தான் தந்தாய், நன்றி!"

- எம்.கோவிந்தன் (மலையாளம்)

# அடுத்த தேசியத் தலைவர் கனவு சிறீதரனுக்கு! சாடுகிறது சுரேஷுக்கு ஆதரவான இணையத்தளம்!

ஜெனிவா பயணம் தொடர்பில் கூட்டமைப்பு எடுத்திருக்கின்ற முடிவுகள் அதன் பின்னணிகள் தொடர்பில் பரவலாக எதிர்ப்பலைகளே எழுந்திருக்கின்றன. ஆதரவு அலைகள் என்று பார்க்கின்ற போது அவை சிலரைத் திருப்திப் படுத்தும் வகையிலேயே அமைந்திருப்பதை அவதானிக்க முடியும்.

ஊடகங்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளைச் சரியானது என்று நியாயப்படுத்தும் வகையில் செயற்படுபவற்றை இரண்டு வகையில் பகுப்புச் செய்யலாம். ஒன்று அரச ஊடகங்கள் இரண்டாவது வக்காலத்து வாங்கும் அல்லது திருப்திப்படுத்தும் ஊடகங்கள்.

அரச ஊடகங்கள் அரசாங்கத்தினை நெருக்கடியில் இருந்து காப்பாற்றுவதற்காக கூட்டமைப்பு எடுத்திருக்கின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவினைப் பாராட்டி எழுதுவது தவிர்க்கப்பட முடியாததுதான். இரண்டாவது வகைக்குள் அடங்குகின்ற திருப்திப் படுத்தும் வகையில் எழுதுகின்ற ஊடகங்களின் போக்கு என்பது முற்றுமுழுதாக யாரோ தனிப்பட்ட நபர்களைத் திருப்திப் படுத்தும் நோக்கம் கொண்டவையே தவிர மாறாக பொது நோக்கம் கொண்டவை அல்ல.

இரண்டாவது வகைக்கு அடங்கும் ஊடகங்களில் ஒன்றாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் இணையத்தளமான "மனிதன்" செயற்படுவதை அடையாளம் காணமுடிகிறது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் தேசியப்பட்டியல் எம்.பி. சுமந்திரனின் கொடும்பாவி தொங்கவிடப்பட்டமை மற்றும் ஜெனிவா செல்வதில்லை என்று கூட்டமைப்பு எடுத்த முடிவு தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கை என்பன தொடர்பில் ஈ.பி.டி.பிக்கும் கூட்டமைப்பு எம்.பி. சுரேஸ்பிரேமச்சந்திரனுக்கும் முடிச்சுப்போடுவதற்கு "மனிதன்" முற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

குறித்த இணையத்தில் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நடக்கும் ஆடு புலி ஆட்டம்" என்ற செய்தி வெளியிடப்பட்டிருக்கின்றது. குறித்த செய்தியின் ஓரமாக "மாணவர் ஒன்றியம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதில் எந்த மாணவர் ஒன்றியம் என்று குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் இணையம தமிழரசுக்கட்சியின் இளஞ்சிங்கம் என்று



கட்சியினரால் சொல்லப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களின் இணையம் என்பதால் அது குறித்து பொறுப்புக் கூறும் கடப்பாடு அவருக்கு இருக்கும் என்று நம்பலாம்.

குறித்த செய்தியின சில முக்கிய வரிகள்..." நேற்று யாழ்ப் பாணப் பல்கலைகழகத்தில் இடம் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான நிகழ் வில் வடக்கில் அரசுடன் இணைந்து செயற்படும் ஒரு கட்சியின் அனுசரணை யாளர்களும், அண்மையில் இந்தியா சென்றுவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் நெருங்கிய ஆதரவாளர்களும் இணைந்து செயற்பட்டதாக பல்கலைக்கழக மாணவர்கள் எமது செய்தியாளருக்குத் நேரடியாகத் தெரிவித்துள்ளனர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது...

குறிப்பிட்ட நாளில் பல்கலைக்கழகத்தில் இரண்டு சம்பவங்களும் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. முதலாவது கொடும்பாவி எரிக்கப்பட்டமை இரண்டாவது கூட்டமைப்புக்கு எதிராக அறிக்கை வெளியிடப்பட்டமை...

ஈ.பி.டி.பி.யோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்போ சொல்வதைக் கேட்டுக்கொண்டு அப்படியே நடந்து கொள்ளும் அளவிற்கு பல்கலைக்கழக மாணவர்கள் எதுவுமே தெரியாத பச்சைக்குழந்தைகள் இல்லை.

உங்களது கட்சிப் போட்டிகளை உங்கள் கட்சிக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். மாறாக மாணவர்களின் ஜனநாயக உரிமைகளை, அவர்களின் எழுச்சியை அடக்குவதற்கு, நீங்கள் உங்களுக்கு எதிரான நாடாளுமன்ற உறுப்பினர்களோடோ, அரச ஆதரவுக் கட்சியான ஈ.பி.டி.பியோடையோ தொடர்புபடுத்தி எழுதுவது எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாதது ஆகும்.

வியாபார இணையத்தளங்களை வைத்திருக்கின்றீர்கள் என்பது எல்லோருக்கும் புரியும் விடயமாகும். உங்களை தமிழரசுக்கட்சியினர் தமது நம்பிக்கைத் தூணாகக் கருதவேண்டும் என்பதற்காக சுமந்திரனுக்கோ சம்பந்தருக்கோ முதுகு சொறியும் நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக மாணவர்களைக் கொச்சைப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை முற்றாக உடைத்துவிட்டு தமிழரசுக்கட்சியினைத் தனியான கட்சியாக மக்கள் மத்தியில் கொண்டுசெல்லவேண்டும், என்பதற்கும் அப்பால், எதிர்காலத் தேசியத்தலைவர் என்ற கனவே உங்கள் நோக்கம் என்பது தற்போது புலத்திலும் தாயகத்திலும் அனைவருக்கும் அம்பலமான விடயமாகும்.

அதற்கு தடையானவர்களாக நீங்கள் கருதுகின்ற சுரேஸ் பிரேமச்சந்திரனையோ, அல்லது வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களையோ ஈபிடிபியோடோ, அல்லது அரசாங்கத்தோடோ தொடர்புபடுத்தி எழுதுவது என்பது உங்கள் பார்வையில் சரியானது ஆகலாம். அவர்களை நீங்கள் பிரச்சினையாகப் பார்ப்பதோ?, நீங்கள் அவர்களைப் பிரச்சினையாகப் பார்ப்பதோ? அது உங்கள் பிரச்சினையாகும். அந்தப் பிரச்சினைகளுடன் பல்கலைக்கழக மாணவர்களின் கருத்து உரிமையை எவ்வாறு நீங்கள் கொச்சைப்படுத்த முடியும்.

தமிழ்த் தேசியத்தினை உண்மையாக நேசிக்கின்ற எவரும் ஜெனிவா செல்வதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பின்னடிக்கும் முடிவினை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டும் அரசியலுக்காவும் விளம்பரத்திற்காகவும் யாரும் இடையூறாக அமைந்தால் அவர்கள் மீது இராணுவப் புலனாய்வாளர்கள் முத்திரைகுத்துவதோ, அவர்களை துரோகிகளாக அடையாளப் படுத்துவதோ உங்களுக்குப் புதிதானது அல்ல. ஆனால் மாணவர் சக்தியை அரவணைக்காது அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்புக்கொடுக்காது சின்னத்தனமாக நடந்து கொள்ளுவது மாணவர்களின் உணர்வுகளைச் சீண்டிப்பார்க்கும் நடவடிக்கையாகும்.

கதிரைக்காக என்ன எல்லாம் செய்ய ஏலுமோ? அதெல்லாம் செய்வதற்கு தயாராயுள்ள நீங்கள் மக்களின் நாடித் துடிப்பு அறிந்து அரசியல் செய்வதே உங்களுக்கும் உங்கள் இணையத்தளங்களுக்குமான எதிர்காலத்திற்கான ஆரோக்கியமாக அமையும் என்பதை ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை? எதிர்காலம் ஒரு போதும் தவறான பாதையை காட்டிநிற்காது. சரியான பாதையில் தவறாக நடந்தாலும் இலக்கினை எட்டுவது சாத்தியமாகாது.

சிறீதரனது சகோதரனின் இணையத்தளங்கள் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பியின் கீழேயே இயங்குகின்றன - நேர்மையானவரா சிறீதரன்? இவ்வாறு கேட்டுள்ளது சுரேஷ் ஆதரவு இணையத்தளம்.

## சின்னத்திரை செல்கிறார் அசின்!



கோலிவுட்டில் நம்பர் 1 நடிகை என அந்தஸ்துடன் பொலிவுட் சென்ற அசினுக்கு அங்குள்ள போட்டியைச் சமாளிக்க முடியவில்லை. கரீனா, கத்ரீனா, பிரியங்கா, தீபிகா என அசினுக்கு பொலிவுட்டில் கடும் போட்டி நிலவுகிறது. அங்கே கஜினியின் ரீமேக் தவிர எந்த ஒரு படமும் அசின் பெயர் சொல்லும் அளவுக்கு ஓடவில்லை. ஆனால் திடீர் சின்னத்திரை வாய்ப்புகள் அங்கு கிடைத்துள்ளன. இதனால் சின்னத்திரைக்கு செல்ல முடிவு செய்துள்ளார் அசின். விரைவில் சூப்பர் ஸ்டார் சாண்டா என்ற நிகழ்ச்சியில் அசின் நடிக்கவுள்ளார். சின்னத்திரைக்கு வந்தது பற்றி அசின் கூறுகையில், யு.டி.வி.யின் சூப்பர் சாண்டா நிகழ்ச்சியில் நடிக்கிறேன். பெரிய திரையை காட்டிலும், சின்னத்திரை மூலமாக நேரடியாக ரசிகர்களை சென்றடையலாம். இது ஒரு அருமையான நிகழ்ச்சி, நட்பை விளக்கும் உன்னதமான நிகழ்ச்சி என்று கூறியுள்ளார்.

# கூட்டமைப்பிற்குப் பின்னால் இழுபடும் துயரம்!

அரசியல் அவதானிகள் எதிர்பார்த்தது போலவே இந்தத் தடவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் இலாவகமான முறையில் மகிந்தர் அரசினைப் பாதுகாத்திருக்கின்றது. ஜெனிவாவிற்கு செல்லாததன் மூலமே இதனை நிறைவேற்றி இருக்கின்றது.

புலம்பெயர் மக்கள் ஜெனிவாவில் கூட்டமைப்பினர் கடமையாற்றுவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுத்திருந்தனர். கூட்டமைப்பினர் செல்லாதது அவர்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றம்தான். தாயகத்திலுள்ள சாதாரண மக்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ஆனால் கூட்டமைப்பினதும், குறிப்பாக சம்பந்தனதும், சுமந்திரனதும் அண்மைக்கால நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து வந்தவர்களுக்கு கூட்டமைப்பின் நடத்தை எந்த ஆச்சரியத்தையோ, அதிர்ச்சியையோ கொடுக்கவில்லை. அவர்கள கூட்டமைப்பின் அண்மைக்கால நடத்தைகளின் தொடச்சியாகவே இதனைப் பார்க்கின்றனர்.

ஜெனிவாவில் இலங்கை அரசிற்கு நெருக்கடிகள் வந்த ஒவ்வொரு தடவையும் சம்பந்தன் ஓடோடிச்சென்று அரசினைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார். அதற்காக சுயமரியாதை எல்லாவற்றையும் தூக்கியெறிநதும்கூட பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டார். முன்னர் விதித்த நிபந்தனைகளை கிடப்பில் போடவும் இது விடயத்தில் அவர் தயங்கவில்லை.

இந்தத் தடவையும் சில தினங்களுக்கு முன்பு ஜனாதிபதியைச் சந்தித்தபோது அதற்கான உத்தரவாதங்களை வழங்கினார். பாதுகாக்கும் முயற்சி அதி உன்னதமாக இருக்கவேண்டும் என்பதற்காக அறிக்கை வடிவிலும் அதனை வெளியிட்டார்.

பாதுகாக்கும் விடயங்கள் தொடர்பான உரையாடல்களை ஜனாதிபதியுடன் மேற்கொள்ளும்போது சம்பந்தன்



எவரையும் உடன் அழைத்துச் செல்வதில்லை. சுமந்திரனைக்கூட அழைத்துச செல்வதில்லை. சுமந்திரன் உரையாடலுக்கான ஏற்பாடுகளை மட்டும் செய்துவிட்டு மௌனமாக இருந்துவிடுவார். சுமந்திரனை அழைத்துச் செல்வதில் சம்பந்தனுக்கு எந்தவித தயக்கமும் கிடையாது. இருவரும் இணைந்துதான் எல்லா முடிவுகளையும் எடுக்கின்றனர். எனினும் சுரேஷ் பிரேமச்சந்திரனை அழைத்துச் செல்லவேண்டிவரும் என்பதற்காகவே அவர் தவிர்த்து விடப்படுகின்றார்.

அலரி மாளிகையில் சம்பந்தனதும், ஜனாதிபதியினதும் இந்த உரையாடல்களின்போது அவர்கள் இருவரையும் தவிர வேறு எவரும் அறைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. சம்பந்தனை சாம் அங்கிள் (Sam Uncle) என்றே மகிந்தர் செல்லமாக அழைப்பது வழக்கம்.

இந்தத் தடவை சம்பந்தனிடம் ஜனாதிபதி இரண்டு வேண்டுகோள்களை விடுத்திருந்தார். ஒன்று தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்குபற்றுவது, இரண்டாவது ஜெனிவாவிற்கு செல்லாமல் இலங்கைக்கு சார்பாக அறிக்கையினை விடுவது.

முதலாவதை ஏற்றுக்கொள்ள சம்பந்தன் தயக்கம் காட்டினார். தமிழ் மக்களின் எதிர்ப்பு குறிப்பாக தமிழ் சிவில் சமூகத்தின் எதிர்ப்பு இதற்கு அதிகமாக இருப்பதுதான் இதற்குக் காரணம். இரண்டாவது வேண்டுகோளை அவர் ஏற்றுக்கொண்டார். அதன் அடிப்படையிலேயே சம்பந்தனின் அறிக்கை வெளிவந்திருக்கிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் நடைபெற்றபோது சம்பந்தனையும் சுமந்திரனையும் தவிர ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் ஜெனிவாவிற்கு கூட்டமைப்பினர் செல்லவேண்டும் என்ற கருத்தினையே முன்வைத்திருந்தனர். பெரும்பான்மைக் கருத்து செல்லவேண்டும் என இருந்ததினால் சம்பந்தனும், சுமந்திரனும் அதற்கு உடன்பட்டதாகவே தகவல்.

சம்பந்தன் அறிக்கையை வெளியிட முன் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களுடன் எந்தவித கலந்தாலோசனையிலும் ஈடுபடவில்லை. குறைந்தபட்சம தமிழரசுக்கட்சியின் செயற்குழுவுடன் கூட கலந்தாலோசிக்கவில்லை. சம்பந்தனும், சுமந்திரனும் மட்டும் தனித்து முடிவெடுத்துவிட்டு அறிக்கையினை வெளியிட்டுள்ளனர்.

எல்லாம் முடிந்தபின்னர் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொலைபேசி மூலமாக சுமந்திரன் செய்தி அனுப்பியதாக ஒரு தகவல். இது பற்றி சுரேஷ் பிரேமச்சந்திரன் அன்றைய தினமே பி.பி.சி தமிழோசைக்கு கருத்து தெரிவித்திருந்தார். "இது கூட்டமைப்பின் முடிவல்ல. சம்பந்தனும், சுமந்திரனதும் தனிப்பட்ட முடிவு" எனக் கூறியிருந்தார்.

சுரேஷின் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்துள்ள சம்பந்தன், அது தனிப்பட்ட முடிவில்லை கூட்டமைப்பின் முடிவு. சுரேஷ் சென்னையிலிருந்து இலங்கை திரும்பியதும் அவருக்கு விளக்கம் கொடுக்கப்படும் எனக் கூறியிருக்கின்றார். இதன்மூலம் கூட்டமைப்பில் இணைந்துள்ள இன்னோர் கட்சியின் தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் எந்தவித கலந்தாலோசனையும் மேற்கொள்ளாமல் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதை சம்பந்தனே நேரடியாக ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன், சம்பந்தன தொடர்பாக பகிரங்கமாகக் கருத்துக்களைத் தெரிவித்தாலும், அவர் ஒருபோதும் கூட்டமைப்பை விட்டு வெளியேறப் போவதில்லை. கூட்டமைப்புக்கு வெளியே அவருக்கு அரசியல் இருப்பு எதுவும் கிடையாது.


சுரேசும், செல்வமும் இணைந்து கூட்டாகச் செயற்படுவதற்கு சில முயற்சிகள் எடுத்திருக்கின்றனர் என்பது உண்மைதான். வவுனியாவில் அவர்கள நடத்திய ஊடகவியலாளர் மாநாடும், கூட்டமைப்பின் கிளைகளை எல்லா இடங்களிலும் திறக்கப் போகின்றோம் என்ற அறிவிப்பும் இதன் வெளிப்பாடுகளே!

அண்மைக்காலமாக சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறிவருகின்ற வெளிநாட்டு மத்தியஸ்தம், போர்க்குற்றம் போன்ற கருத்துகளுடன் கூட்டமைப்பில் அவரினால் தொடர்ந்து செயற்பட முடியாது. கூட்டமைப்பு அவருக்கு கொடுத்து வருகின்ற தொடர்ச்சியான அவமானங்களையும் அவரினால் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

ஆனாலும் கதிரை அரசியலை விட்டு அவரினால் விலகமுடியாத நிலையும், அவ் அரசியலின் இருப்பிற்கு சம்பந்தன் தலைமையினை சார்ந்திருக்கின்ற நிலையும் அவரையும் செல்வம் அடைக்கலநாதனையும் கூட்டமைப்பிற்கு பின்னால் இழுபட்டு செல்கின்ற முடிவையே எடுக்கவைக்கும்.

- முத்துக்குமார் கட்டுரையிலிருந்து

# வெளியேறும் முன் இரகசியங்கள் வெளியிடும் இராணுவத் தளபதி



(புதுடில்லி)

இராணுவத்தில் வெடிமருந்துகள் பற்றாக்குறை கடுமையாகவுள்ளது. போர் உருவானால், தற்போதுள்ள வெடிமருந்துகள் இருப்பு இரண்டு நாட்களில் முடிந்து விடும் என ஓய்வு பெறப் போகும் இந்திய இராணுவத் தளபதி வி.கே.சிங் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதி வயது விவகாரம் தொடர்பாக, இராணுவ நிர்வாகத்திற்கும், இராணுவ அமைச்சுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் சமீபத்தில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பால் முடிவுக்கு வந்தது.

இதனால் எதிர்வரும் 31 ஆம் திகதி, தற்போதைய இராணுவத் தளபதி வி.கே.சிங் ஓய்வு பெறுகிறார். புதிய இராணுவத் தளபதியாக பைக்ராம்சிங் பதவியேற்க உள்ளார்.

இந்நிலையில் இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோனிக்கு இராணுவத் தளபதி வி.கே.சிங் எழுதியுள்ள கடிதத்தில் இராணுவத்தில் வெடிமருந்துகள் மற்றும் குண்டுகள் போன்ற போர்த்தளபாடங்கள் பற்றாக்குறை கடுமையாக உள்ளது.

போர் உருவானால், தற்போது இருப்பில் உள்ள வெடிமருந்துகள் எல்லாம் இரண்டு நாட்களில் முடிந்து விடும். இந்த நிலைமை உருவாவதற்கு இராணுவத்திற்கு வெடிமருந்துகள் விநியோகம் செய்யும் சில நிறுவனங்களை கறுப்புப் பட்டியலில் வைத்ததே காரணம்.

பீரங்கிகளுக்கு தேவையான மற்றும் வான் வழியாகத் தாக்குதல் நடத்த தேவையான வெடிமருந்துகள் தான் மிகக் குறைவாக உள்ளன என எழுதி உள் வீட்டு விவகாரங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

# நகர்ப்புறங்களில் கவனிப்பற்ற சிறுவர்கள்

(புதுடில்லி)

இந்தியாவில் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு உணவு, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

இதனால் அவர்கள் எதிர்காலத்தில் எதிர்மறையான விளைவுகளுக்கு ஆட்படுகின்றனர் என யுனிசெப் ஆய்வு தெரிவிக்கிறது. யுனிசெப் அமைப்பானது 'உலக குழந்தைகளின் நிலைமை 2012' என்ற தலைப்பில் ஒரு ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது. இது பற்றி அந்த ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இந்தியாவின் நகர்ப்புறங்களில் மொத்தம் 50,000 குடிசைப் பகுதிகள் உள்ளன. இவற்றில் 9 கோடியே 70 இலட்சம் பேர் வசிக்கின்றனர். இதில் 70 சதவீதம் பேர், மகாராஷ்டிரா, ஆந்திரா, மேற்கு வங் கம், தமிழ்நாடு மற்றும் குஜராத்தில் உள்ளனர்.



குறிப்பாக, 35 சத வீத குடிசை வாசிகள் மகாராஷ்டிரா மாநிலத்தில்தான் உள்ளனர். வரும் 2026 ஆம் ஆண்டு வாக்கில் இந்திய மக்கள்தொகையில் 40 சதவீதம் பேர் நகர்ப்புறங்களில்தான் இருப்பார்கள்.

எனவே நகர்ப்புறங்களில் உள்ள ஏழைகளின் பிரச்சினைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இதில் அரசுகள் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் இந்தியாவில் 47 சதவீத சிறுவர்களுக்கு 18 வயதுக்குள் திருமணம் நடந்து விடுகிறது. அதிலும் 18 சதவீத பேருக்கு 15 வயதுக்குள் திருமணம் நடக்கிறது என ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தகப்படிப்பு மட்டும் வாழ்க்கைக்கு உதவாது அண்ணா பல்கலைக்கழக இயக்குநர் அறிவுரை

(ஓசூர்)


வெறும் புத்தகப்படிப்பு மட்டும் வாழ்க்கைக்கு உதவாது. படிப்புடன் கூடிய தனித்திறமைகளையும் மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். தேடலை உண்டாக்கி அறிவை மேம்படுத்த வேண்டும் என கோவை அண்ணா பல்கலை இயக்குநர் முனைவர் தீபா தெரிவித்தார்.

ஓசூரில் பொறியியலாளர் பெருமாள் மணிமேகலை கல்லூரியில் தகவல் தொடர்பு, கணக்கீடு மற்றும் கட்டுப்பாட்டு அமைபபுகளின் தேசிய மாநாட்டு கருத்தரங்கம் நடந்தது.

அங்கு கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தகவல் தொடர்பு, கணக்கீடு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புகளின் சேவை முக்கியத்துவம் வாய்ந்தது. ஆராய்ச்சி ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையானது. ஆராய்சசி இல்லையென்றால் வளர்ச்சி இருக்காது. புதிய தொழில் நுட்பங்களும் கிடைக்காது. மாணவர்கள், ஆசிரியர்கள் தங்களிடம் இல்லாத திறமைகளைப் பற்றிக் கவலைப் படக் கூடாது. இருக்கிற தனித்திறமைகளை மேம்படுத்தி, வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய முயற்சி செய்ய வேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு, புதிய சிந்தனைகளை ஊக்கப்படுத்த வேண்டும்.



சிறந்த மாணவர்களால் மட்டுமே எதிர்காலத்தில் சாதனைகளை நிகழ்த்த முடியும். அதனால், சிறந்த மாணவர்களாக உருவாக தேடலை உண்டாக்கி அறிவை மேம்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# பீகாரில் உருவாகும் மிகப்பெரிய கோவில்

(சென்னை)

உலகத்திலேயே மிகப் பெரிய இந்துக்கோவிலை பீகார் மாநிலம் வைசாலி மாவட்டத்தில் கட்டப்போவதாக மகாவீர் மந்திர் அறக்கட்டளை அறிவித்துள்ளது.

இந்தக் கோவில் 100 கோடி செலவில் அமைக்கப்பட உள்ளது. சுமார் 15 ஏக்கர் பரப்பளவில் 5 மாடிகளைக் கொண்ட இக்கோவிலின் உயரம், சுமார் 222 அடி உயரம் இருக்கும் எனவும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

கோவில் கட்டத்தேவையான நிலம் 30 கோடி ரூபாய் செலவில் வாங்கியுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

தற்போது கம்போடியா நாட்டில் உள்ள அங்கர்வாட் கோவில் உலகின் மிகப்பெரிய இந்துக்கோவிலாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஒரே நேரத்தில் 1150 மாணவர்கள் உடலுறுப்பு தானத்திற்கு ஒப்புதல்

(புதுச்சேரி)

கல்லூரி மாணவர்கள் 1,150 பேர் ஜிப்மர் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் ஒரே நேரத்தில் உடல் உறுப்பு தானம் செய்வதற்கான ஒப்புதல் படிவத்தில் கையெழுத்திட்டனர்.

இறந்த பின், தீ மற்றும் மண்ணுக்கு இரையாகும் மனித உறுப்புகளை, தானம் செய்வதன் மூலம், உயிருடன் இருக்கும் சிலரின் வாழ்வில் ஒளியேற்றவும், உயிரூட்டவும் முடியும். மக்கள் தொகை மிகுந்த இந்தியாவில், இது பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே உள்ளது.

படித்தவர்கள் கூட உயிருடன் இருக்கும் போது இரத்த தானமும், இறந்த பிறகு உடல் உறுப்புத் தானமும் செய்யவும் முன் வருவதில்லை.

இதுகுறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்த, புதுச்சேரியில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த, ஆயிரக்கணக்கான மாணவ, மாணவியர் சமூக அமைப்பு ஒன்றின் சார்பில், ஜிப்மரில் ஒன்று கூடினர். உடல் உறுப்புகளைத் தானம் செய்வதன் மூலம், மரண வாசலில் நின்று கொண்டு உயிருக்குப் போராடும் ஒருவரது உயிரையும், அவரது குடும்பத்தையும் காப்பாற்ற முடியும் என அனைவரும் ஒரே குரலில் உறுதிமொழி எடுத்துக் கொண் டனர்.




இதேவேளை அமெரிக்காவில், 765 பேர் உடல் உறுபபுத் தானம் செய்து கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

இந்திய சாதனைப் புத்தகமான லிம்காவில், உடல் உறுப்புத் தானம் பற்றி இது வரை இடம் பெறவில்லை.

எனவே, ஜிப்மரில் 1,150 மாணவர்கள் ஒன்று திரண்டு உடல் உறுப்புத் தானம் செய்துள்ளது, லிம்கா சாதனைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கின்னஸ் சாதனைக்கு அனுப்பவும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# இந்தியாவில் ஓரினச்சேர்க்கைக்கு மத்திய அரசு பச்சைக்கொடி

(புதுடில்லி)

ஓரினச் சேர்க்கை குற்றமாகாது என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய உள்துறை அமைச்சகம் மனுத்தாக்கல் செய்துள்ளது. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது குற்றம் ஆகாது என்று டில்லி உயர் நீதிமன்றம் கடந்த 2009 ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. இதனை ஓரினச் சேர்க்கையாளர்கள் வரவேற்றனர். தீர்ப்பை எதிர்த்து அரசியல் கட்சிகள், மத அமைப்புகள் எனப் பல தரப்பினர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த மனுக்களை நீதிபதிகள் குழு விசாரித்து வருகிறது. இந்த நிலையில் உச்ச நீதிமன்றத்தில் மத்திய உள்துறை செயலாளர் ஆர்.கே.சிங் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில் ஆர்.கே.சிங கூறியிருப்பதாவது,

ஓரினச் சேர்க்கை தொடர்பாக டில்லி உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்ப்பதில்லை என்று கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூலை 28 ஆம் திகதி நடந்த அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதை மத்திய அமைச்சரவையும் ஏற்றுக் கொண்டது. டில்லி உயர் நீதிமன்றத் தீர்ப்பை சட்டப்படி தவறானதாக மத்திய அரசு கருதவில்லை. இதனால், உயர் நீதிமன்றத் தீர்ப்பு சட்டப்படி சரியானதா அல்லது தவறானதா என்பது பற்றி உச்ச நீதிமன்றம் பரிசீலித்துத் தீர்ப்பளிக்கலாம். இவ்வாறு அம்மனுவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# அணுமின் நிலையமும் பால் காவடியும்




(வள்ளியூர்)

கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராடக் குழுவினர் நேற்று முன்தினம் 139 ஆம் நாளாக இடிந்தகரையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

மேலும் 250 பேர் கூடங்குளம் விநாயகர் கோயிலில் இருந்து பால் குடம் எடுத்து ஊர்வலமாகச் சென்றனர். அணு உலை எதிர்ப்பு முழக்கமிட்டபடி இடிந்தகரை வழியாக 8 கிலோமீற்றர் தூரம் சென்று, விஜயாபதி விஸ்வாமித்ரர் கோயிலில் பாலாபிஷேகம் செய்தனர்.

## தவக்காலச் சிந்தனை



1. தவறாமல் இக்காலம் முழுவதும் ஒவ்வொரு நாளும் திருப்பலியில் பங்கேற்று நற்கருணை உட்கொள்ளல்.
2. வேதாகமத்தை வாசித்தல்.
3. வெள்ளிக்கிழமைகளில் இயேசுவின் பாடுகளில் பயணித்தல் முடிந்தால் இக்காலம் முழுவதும் சுத்த போசனம் கடைப்பிடிக்கலாம்.
5. ஒவ்வொரு நாளும் ஜெபமாலை சொல்லுதல்.
6. நேரம் கிடைக்கும் போது நற்கருணை ஆண்டவரை சந்தித்தல்.
7 . மனவல்ய ஜெபத்தை அடிக்கடி சொல்லுதல். உதாரணமாக (இயேசுவே என் மேல் இரக்கமாயிரும். இயேசுவே நான் பாவி. இயேசுவே உம் இரத்தம் என்னை கழுவப்படும். உம் பாடுகள் என்னைத் தேற்றட்டும்)
8. துன்ப துயரத்தில் இருப்போர் இயேசுவின் பாடுகளை தியானித்து, ஆறுதலும் நம்பிக்கையும் அடைதல்.
9. பாவசங்கீர்த்தனத்தை அடிக்கடி பெற முயற்சித்தல்.
10. கிடைக்கும் நேரத்தை வீணாக்காமல் ஆன்மீக வளர்ச்சிக்காக பயன்படுத்துதல்.
11. மது அருந்துதல், புகைப்பிடித்தல் இவற்றை தவிர்க்க முயற்சித்தல்.
10. தொலைக்காட்சி தேவையற்ற புத்தகங்கள் வாசித்தல், இவற்றில் கட்டுப்பாட்டை கொண்டுவர முயற்சித்தல்.
12. கிடைக்கும் அடிப்படைச் சம்பளத்தில் பத்தில் ஒரு பகுதியை இறைப்பணிக்கு செலவு செய்தல்.

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்

# கொங்கோ ஆயுதக்கிடங்கில் வெடி விபத்து; 200 பேர் பலி!




கொங்கோவில் உள்ள பிரான்சின் இராணுவத் தலைமையகத்தில் ஆயுதக்கிடங்கில் ஏற்பட்ட வெடி விபத்தில் 200 பேர் பலியாகி உள்ளனர், 1500இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். கொங்கோ நாட்டின் தலைநகர் பிரேசாவில்லே ின் கிழக்குப் பகுதியில் உள்ள இராணுவ வெடிமருந்துக் கிடங்கில் திடீரென்று விபத்து ஏற்பட்டது, அங்கிருந்த வெடிகுண்டுகள் மற்றும் வெடிபொருட்கள் பயங்கரச் சத்தத்துடன் வெடித்துச் சிதறின. நீண்ட நேரம் அவை வெடித்துக் கொண்டே இருந்தன. இந்த வெடிவிபத்தில் 200 பேர் பலி ஆனார்கள். மேலும் 1500இற்கும் அதிகமான பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உள்ளனர். காயம் அடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்த வெடிப்புக் காரணமாக சிதைவடைந்துள்ள தேவாலயம் ஒன்றிற்குள் பலர் சிக்கியுள்ளதாகவும் கொங்கோ ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

சதி மற்றும் உள்நாட்டு யுத்தங்கள் காரணமாக கடந்த காலங்களில் பாதிக்கப்பட்டிருந்த கொங்கோ ஜனநாயகக் குடியரசில் 1990ஆம் ஆண்டுக்கு பின்னர் அமைதியான சூழல் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் 3ஆவது முறையாக தெரிவானார் புடின்

(மொஸ்கோ)



ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெற்றுள்ளதாக விளாடிமீர் புடின் பிரகடனம் செய்துள்ளார். ரஷ்யாவில் நேற்றுமுன்தினம் அதிபர் தேர்தல் நடந்தது. ஐக்கிய ரஷ்ய கட்சி சார்பில் பிரதமர் புடின் மூன்றாவது முறையாக அதிபர் தேர்தலில் போட்டியிட்டுள்ளார். கடந்த 2000 முதல் 2008ஆம் ஆண்டு வரை இரண்டு முறை புடின் அதிபராகப் பதவி வகித்துள்ளார். நான்கு வருடங்கள் பிரதமராகப் பதவி வகித்த பின்னர் மூன்றாவது முறையாக அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கருத்துக் கணிப்பு மற்றும் ஆரம்ப கட்ட முடிவுகளின் பிரகாரம் விளாடிமீர் புடின் 60 வீதமான வாக்குகளைப் பெற்றுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது எனினும் இந்தத் தேர்தலில் பரவலாக மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளதுடன், ஒரு தடவைக்கு அதிகமாக பலர் வாக்களித்தாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது. இந்தத் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் மொஸ்கோவில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் எதிர்கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. எனினும் ஆயிரக்கணக்கான விளாடிமீர் புடினின் ஆதரவாளர்கள் ரஷ்ய கொடிகள் மற்றும் பதாகைகளுடன் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளதாகத் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உதவிகளை வழங்க தொடர் முயற்சி

(பாபா ஆமர)




சிரியாவின் பாபா ஆமர் மாவட்டத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு மூன்றாவது நாளாகவும் முயற்சித்துள்ளது.

குறித்த பிராந்தியத்தில் வெடிபொருட்கள் இருப்பதற்கான அபாயம் உள்ளதால் தங்களை அனுமதிக்க முடியாது என அதிகாரிகள் குறிப்பிட்டதாக செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு குறித்த பகுதிக்கு உட்பிரவேசிக்கத் தடை விதித்த அதிகாரிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை குறிப்பிட்ட பகுதிகளில் வெடிப்பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக சிரிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# மாற்றம் பற்றி மக்களுக்கு தலையைச் சுற்றும் ஒபாமா

(வொஷிங்டன்)



இரண்டாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ஒபாமா, கடந்த 2008ஆம் ஆண்டு தேர்தலில் மாற்றம் கொண்டு வருவதாகக் கூறியதை நினைவுபடுத்தியதுடன் மாற்றம் கொண்டு வருவதற்கு கூடுதல் கால அவகாசம் தேவைப்படு வதால் இரண்டாவது முறையாக தனக்கு வாய்ப்பு அளிக்கும்படி கோரியுள்ளார்.

மகாத்மா காந்தியும், நெல்சன் மண்டேலாவும் தங்களது நோக்கத்தை அடைய நீண்ட காலம் எடுத்துக் கொண்டனர். நாம் எதிர்பார்க்கும் மாற்றம் வெகுவிரைவில் வந்துவிடாது. உண்மையான மாற்றம், பெரிய மாற்றம் என்பதானது அடைவதற்குக் கடினமானது. அதை அடைவதற்கு கூடுதல்கால அவகாசம் தேவைப்படுகிறது. கூடுதல் ஆட்சிக் காலம் தேவைப்படுகிறது. மாற்றத்தைக் கொண்டுவர ஒன் றுக்கும் மேற்பட்ட ஜனாதிபதிகள் தேவைப்படுகிறார்கள். தனிப்பட்ட நபர்களைக் காட்டிலும் கூடுதல் நபர்கள் தேவைப் படுகிறார்கள்.

அமெரிக்கா கடினமான காலகட்டத்தில் உள்ளதால், மாற்றத்தைக் கொண்டு வருவது இயலாது. ஆனாலும் மாற்றத்தைக் கொண்டு வர சாதாரண குடிமகனால் இயலும். உயர்ந்த குறிக்கோள்களை அடைவதற்காகப் போராடுவதற்கும், படிப்படியாக வளர்ச்சியை அடையவும் அவர்கள் நம்பிக்கை வைப்பார்களேயானால் மாற்றத்தைக் கொண்டு வர இயலும் என்றார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு கட்டத்தில் இந்தியப் பத்திரிகைகள் அனைத்திலும் தலைப்புச் செய்தியாக இடம் பிடித்தது ரத்தன் டாடாவின் ‘நேநோ’ கார். முதல் பக்கத்திலேயே வண்ணப்படம் உள்ளே விரிவான கட்டுரை. இனி மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஒரு லட்ச ரூபாய் காரில் எல்லோரும் உலா வரப்போகிறார்கள். டாட்டாவுக்கு இணை டாட்டாதான், சொன்ன சொல்லைக் காப்பாற்றி விட்டார்களே என்கிற ரீதியில் புகழ் பாடாத பத்திரிகைகளே இல்லை. அதி நவீனமான வடிவமைப்பு, இந்தியச் சாலைகளுக்கு ஏற்றது, நகரங்கள் மட்டுமல்ல, கிராமப்புறங்களுக்கும் ஏற்றது.... இப்படியான விவரணங்கள். அடித்தட்டு மக்களுக்கு அதிர்ஷ்டத்தை அள்ளித்தரும் அற்புதம் என்றும் ஓர் இதழ் எழுதியது. ஆக இவர்களின் கணக்குப்படி இந்தியப் படிநிலை வரிசையில் ஆகக் கீழாக உள்ள மக்கள் யாரென்றால் சுமார் ஒன்றரை லட்சம் செலவு செய்து டாடாவின் புதிய காரை வாங்கக் கூடியவர்கள்தான். அதற்கும் கீழே உள்ள நாற்பது கோடிக்கும் மேற்பட்ட மக்கள் இவர்களைப் பொறுத்தமட்டில் கணக்கில் வராதவர்கள்.

**– அ. மார்க்ஸ**

நண்பர்களே! இங்கிருக்கிற எழுத்தாளர்கள் எல்லாம் அமுல் பேபி எழுத்தாளர்கள். கண்ணதாசன் ஒரு கட்டுரையில் தமிழ் நாட்டு மக்களைப் பற்றிச் சொல்வார். இவர்களுக்கு போர் தெரியாது, புயல் தெரியாது பாவம் குழந்தைகளைப் போல் வளர்க்கப்பட்டு விட்டார்கள் என்று. அது தமிழ் நாட்டு மக்களுக்கு மட்டும் அல்ல. தமிழ் எழுத்தாளர்களுக்கும் பொருந்தும். இவர்கள் ஃபேரக்ஸ் குழந்தைகளாக வளர்க்கப்பட்டு விட்டவர்கள்.

ச. தமிழ்ச்செல்வன் ஒரு கட்டுரையில் சிறு வயது சோகமாக ஒன்றைப் பதிவு செய்கிறார். அவருடைய அப்பாவுக்கு அரசு வேலை. அதனால் அவர் எப்போதும் ஏதாவது ஒரு ஊரில் இருப்பார் அவர் அம்மாவும் உடன் சென்று விடுவார். தமிழ்ச்செலவனும் அவருடைய தம்பியும் இரவெல்லாம் அப்பா அம்மாவை நினைத்த படியே பாட்டி வீட்டில் இருப்பார்கள். இவ்வளவுதான் அவர்களுடைய சோகம். ஒரு மிடில் கிளாஸ் சோகம்.

உழைக்கும் வர்க்கத்தின் இலக்கிய அமைப்பின் செயலாளராகச் சொல்லப்படுபவருடைய சோகமே இவ்வளவுதான் நண்பர்களே.

**– யோகராஜ் பாபு**

பயங்கரவாதம் என்பது என்னதான் குறிக்கோளுடன் கூடியதாக இருந்தாலும், மக்களைக் குழப்பம் அடையச் செய்கிறது, ஏனெனில், மக்களால் தாம் இப்படிச் செய்ய முடியும் என்று கற்பனை கூடச் செய்ய முடிவதில்லை. இத்தகைய குழப்பம், பயங்கரவாதிகள் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அமைதியற்ற சுற்றுச் சூழலின் காரணமாக உருவாக்கப்பட்டவர்கள் என்று பெரும்பாலும் நம்மைக் கருத வைக்கிறது.

கட்டுரை ஒன்றில், ஸிந்தியா ஓஜிக்ஸ், தங்களைத தாங்களே வெடித்துச் சிதறடித்துக் கொள்ளும் பணியில் குழநதைகளை அமர்த்துவது என்ற “காட்டுத்தனமான கண்டுபிடிப்பை” விவரிக்கிறார்: இத்தகைய செயல்கள் “உள்ளுணர்வுக்கு எதிரானவை”, ஏனென்றால் இவை வாழும் உந்துதலுக்கு எதிரானவை, ஒரு பண்பாட்டின் வக்கிரமான கருதுகோளினால் [லட்சியத்தால்] உற பத்தியானவை என்பது அவர் வாதம். இத்தகைய ஆள்சேர்ப்பு மனப்பிறழ்வு அல்ல என்று அவர் சொல்வது சரி என்றாலும் இது மனித உள்ளுணர்வை எதிர்த்தல் என்று சொல்வது முழுவதும் சரியல்ல. இது சில உள்ளுணர்வுகளை மீறுகிறது என்றாலும், வேறு உள்ளுணர்வுகளுடன் இசைவதாகவே இருக்கிறது.

**– ஜேம்ஸ் வில்சன**

நிர்வாக மேட்டிமைகள் பலரும் மிகையான தன்மூப்பில் திளைப்பவர்கள். அடிப்படையில் அதிகாரச் சுரப்பிகளாய் வடிவமைக்கப்பட்டவர்கள். பிறரை சகமனிதர்களாகவன்றி, ஊழியர்களாகவே பார்க்கப் பழகியவர்கள். நட்புக்குச் சூழ்பவர்களை ஏவிப் பிழைக்கிறவர்கள். இவர்களால் ஒருபோதும் மக்களைத் திரட்டி ஈர்க்கும் அரசியல் தலைவர்களாக முடியாது.

**– கவிதாசரண**


குடித்துவிட்டு நாங்கள் ஊர் திரும்பியபோது காரைக்காலின் தெருக்களில் சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்தோம். தெருவை அலைந்துகொண்டு வந்தோம். குடித்துவிட்டு அப்படி வருவது பெரிய பெருமையாக இருந்தது எங்களுக்கு. அடங்காப்பிடாரியாக இருப்பதில் லயிப்பு இருந்த காலகட்டம் அது. சமூக நியதிகளை உடைத்தெறிந்து அதில் மூத்திரம் பெய்து காறித்துப்பி நாசப படுத்த வேண்டும் என்றும் அதுவும் போதாமல் மனம் வெறுப்புக் கொள்ளும் காலகட்டமாக அது இருந்தது. அது திராவிட இயக்கத தால் உண்டாகியிருந்த மனநிலைதான். மிக மெதுவாக மாறும் சமூகத்தில் நாங்கள் பொறுமையில்லாதவர்களாக இருந்தோம் .... இந்தச் சமூகத்தை எதிர்த்த யுத்தத்தில் நாங்கள் போர் வீரர்கள். அப்படித்தான் அப்போது எங்கள் மனநிலை இருந்தது. நாங்கள் ஆகாயத்தில் இருந்தோம்.

**– ந. முத்துசாமி**

# அபாய விளக்குகள் - வன்னியில் ஊழல் முறைகேடுகள்

முன்னர் வன்னி மக்கள் இரத்தம சிந்தும் அரசியற் சூழலில் தங்களின் வாழ்வை இழந்தனர். இப்போது அதே மக்கள் இரத்தத்தை உறிஞ்சும் அரச அதிகாரிகளின், ஒப்பந்தகாரரின் அதிகாரச் சூழலில் தங்களின் எதிர் காலத்தை இழந்து கொண்டிருக்கின்றனர்.

அவ்வாறாயின் காயங்களோடும் கண்ணீரோடும்தான் வன்னி மக்களின் எதிர்காலமும் கழியப்போகிறதா? என்று கேட்கும் நிலையிலேயே வன்னியின் நிலைவரங்கள் இருக்கின்றன. யுத்தம்



ஓய்ந்த பின்னர் உருவாகிய புதிய சூழலை இலங்கையின் பிற பிரதேசத்தினர் அனுபவிக்கிற அளவுக்கு வன்னியிலுள்ள மக்கள் பெறவில்லை.

ஆனால், யுத்தத்திற்குப் பிறகு வன்னிக்கெனப் பெருந்தொகையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குளங்களைப் புனரமைப்பதற்கு, மின்சாரம் வழங்குவதற்கு, வீதிகளைத் திருத்துவதற்கு, பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணிபபதற்கு, ஆஸ்பத்திரிகளைக் கட்டுவதற்கு, ஊர்கள் தோறும் பொதுநோக்கு மண்டபங்களை அமைப்பதற்கு, விவசாயிகளை ஊக்குவித்து விவசாயச்செய்கையை மேம்படுத்துவதற்கு, கடற்றொழிலை விரிவாக்கம் செய்வதற்கு, சிறு கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு, வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, நீர் விநியோகத்துக்கு, வீடுகளை அமைப்பதற்கு, கால்நடை வளர்ப்புக்கு, கலாசார மேம்பாட்டுக்கு, தொழிற்றுறைக் கல்விக்கு, சமூக அபிவிருத்திக்கு, மீள்குடியேற்றத்துக்கு, கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு, வாய்க்கால்களைச் சீர்படுத்துவதற்கு, உள்ளூர் மூலவளப் பயன்பாட்டுக்கு எனப் பல கோடிக்கணக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலமாக போரினாற் சிதைந்து போயிருக்கும் உட்கட்டமைப்புகளை மீளமைப்பதும் மிகப் பின்னடைந்திருக்கும் மக்களின் வாழ்நிலையை மேம்படுத்துவதுமே பிரதான நோக்கம்.

இதற்காக அரசாங்கம் நேரடியாகவும் பிற நாடுகள் மற்றும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றிடமிருந்து கடனடிப்படையிலும் நிதியைப் பெற்று இந்த வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துகிறது. இதைவிட சர்வதேசத் தொண்டர் அமைப்புகளும் சில வெளிநாடுகளும் மனிதாபிமான உதவித்திட்டங்களின் கீழ் குறிப்பிட்டளவு நிதியை வழங்குகின்றன.

எனவே யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் பெருமளவு நிதி வன்னிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வன்னி



யின் இழப்புக்கு, வன்னி மக்கள் இழந்தவற்றுக்கு இது ஈடாகாது. போரினாலும் இயற்கை அழிவுகளினாலும் ஏற்படும் இழப்புகளை எதனாலும் முழுமையாக ஈடுசெய்து விடமுடியாது. எனினும் ஓரளவுக்கு அவற்றைச் சீர்ப்படுத்துதவற்கு முயற்சிப்பது அவசியம். அது ஒரு பொது நிலையும்கூட.

எந்த வழியினால் இந்த நிதி மூலம் பெறப்பட்டாலும் அல்லது இந்த நிதிப் பங்களிப்புகள் வந்தாலும் அதை வேலைத திட்டமாக நடைமுறைப்படுத்துவதும் (Implement Agency) பயனாளர்களைத் தேர்வு செய்வதும் (Benifisers Selection) உள்ளூர் அரச நிர்வாகமே. அதாவது அரச அதிகாரிகளும் உத்தியோகத்தர்களுமே. இங்கேதான் பிரச்சினை.

இந்த நிதி மூலத்துக்கான வேலைத்திடங்களை நடைமுறைப் படுத்துவதிலும் உதவித்திட்டங்களை மேற்கொள்வதிலும் முறைகேடுகளும் ஊழல்களும் தாராளமாகியுள்ளன.

போருக்குப் பிறகு கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைப்புச் செய்யப்பட்ட கல்மடுக்குளம், அக்கராயன்குளம் போன்றன உடனடியாகவே பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளன. அக்கராயன் குளத்தின் கட்டை மேலும் உயர்த்துவதற்கும் மேலதிக நீரை வெளியேற்றும் பகுதியைப் புனரமைப்பதற்கும், வாய்க்கால்களைச் சீரமைப்பதற்கும் என கடந்த ஆண்டு 300 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

ஆனால், இந்த வேலைகளைச் செய்த ஒரு சிலமாதங்களிலேயே மேலதிக நீரை வெளியேற்றும் பகுதி முற்றாகச் சிதைந்து முன்னர் இருந்த நிலையையும் விடப் பெரும பாதிப்புக்குள்ளாகியுள்ளது. போதாக் குறைக்கு முறிகண்டி - ஜெயபுரம் பிரதான வீதியின் ஒரு பகுதியும் முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடலில் ஏற்பட்ட குறைபாடா அல்லது வேலையை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முறைகேடா இதற்குக் காரணம்? நிச்சயமாக முறைகேடுதான் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கரியாலை நாகபடுவான் என்ற குளப்பகுதியிலும் இத்தகைய குறைபாடான - திட்டத்துக்கு மாறான வகையில் புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதேச விவசாயி



- கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

கள் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக அண்மையில் பூநகரியில் நடை பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின்போது விவசாயிகள் தங்களுடைய ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர்.

சுமார் 6.5 கிலோ மீற்றர் நீளமுடைய குளத்தின் அணைக்கட்டினைப் புனரமைபபுச் செய்வதற்கென திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான நிதியும் பெறப்பட்டுள்ளது. ஆனால், வேலையை நடைமுறைப்படுத்தும் கட்டத்தில் குறித்த குளத்தின் அணைக்கட்டுப் பகுதியில் கண்ணிவெடி அபாயம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், ஒதுக்கப்பட்ட நிதியை அதே குளத்தின் பிறிதொரு முக்கியத்துவமற்ற வேலைக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறித்த விவசாயிகள் கூறுகின்றனர்.

மிதிவெடி அபாயம் இருக்குமானால், அதை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை உதவி அரசாங்க அதிபர், அரசாங்க அதிபர் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறான முயற்சிகள் எடுக்கப்படாமல், ஒப்பந்தகாரரின் வசதிப்படியே திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்று குற்றம் சாட்டுகின்றன கமக்காரர் அமைப்புகள்.

இத்தகைய ஒரு நடவடிக்கை கல்மடுக்குளத்தின் புனரமைப்பின் போதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயத்திலும் நீர்ப்பாசனத்திலும் செழிப்பான பாரம்பரியத்தையுடைய இலங்கையின் இன்றைய நீர்ப்பாசன நிலைவரம் இப்படியா இருக்கிறது என்று அக்கராயன் குளக்கட்டில் ஒரு விவசாயி வருத்தத்தோடு உயர் அதிகாரிகளிடம் எழுப்பிய கேள்வியே இந்த இடத்தில் நினைக்கு வருகிறது.

இந்த நிலையில் இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுககப்பட்டுள்ள 3300 பில்லியன் ரூபாய்க்கு என்ன நடக்கப்போகிறது என்று கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

அடுத்த முறைகேடு மின்சார வழங்கலில் நடைபெறுகிறது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ், இலவச மின்சாரத்தை வழங்கி வருகிறது அரசாங்கம். மின்சார இணைப்பும் குறிப்பிட்ட காலத்துக்குள் சேவையும் இலவசமாகவே வழங்கப்படுவதாக அறிவிகக்ப்பட்டு அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், இந்த இலவச இணைப்பை வழங்குவதற்கு இரகசியமாகப் பணத்தை அறவிடுகின்றனர் மின்சார சபையின் ஊழியர்கள் சிலர். இதற்கான ஒரு பொறிமுறையையே அவர்கள் மிக நுட்பமாக உருவாக்கியுள்ளனர்.

மின்சாரத்தைப் பெறுவதற்காக பயனாளிகள் விண்ணப்பிக்கும் படிவங்கள் தவறிவிட்டன. அவற்றைக் காணவில்லை என்று பயனாளிகளுக்கு முதற்கட்டமாகக் கூறப்படும். இதனால், நடையோ நடையென்றும் அலையோ அலை என்று அலைந்து களைத்து விடுகின்றனர் பயனாளிகள். ஒரு கட்டத்தில் மின்சாரத்தை எப்படியாவது பெற்றுவிட வேணடும் என்ற எண்ணத்திற்குப் பயனாளிகள் வரும்போது பேரம் பேசப்படுகிறது. அடுத்த கட்டமாக இலவச மின்சாரம் இரகசியக் கட்டணம் பெறப்பட்டு வழங்கப்படுகிறது.

இந்த நடைமுறை ஒன்றும் மிக இரகசியமானதல்ல. மிகப் பகிரங்கமான அளவுக்கு வந்துள்ளது.

இதைபோல நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்குவதில், விவசாய உபகரணங்களைப்பகிர்வதில், வாழ்வாதார உதவிகளுக்கான பெயர்களைத் தெரிவு செய்வதில் எல்லாம் முறைகேடுகள் தாராளமாகவே நடக்கின்றன. விவசாயம் செய்யாதவர்களே நீர்ப்பம்புகள், மருந்து தெளிகருவிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர். பயனாளிகளைத் தேர்வு செய்வதில் உள்ள இலஞ்சம் பெறுகையே இதற்குக் காரணம்.

இதைப்போல கூட்டுறவுத்துறையில், வீட்டுத்திட்டத் தேர்வுகளில் என இந்த முறைகேடுகள் மேலும் விரிவடைகின்றன.

தனியார் பேருந்துகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், தென்பகுதியிலிருந்து வரும் முதலீட்டாளர்களுககான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்ற வகையிலும் சில உயர் அதிகாரிகள் தாராளமாகவே கைகளை நீட்டிப் பெற்றுக்கொள்கிறனர். சில அதிகாரிகள் சட்டத்துக்கு



மாறான வகையில் தங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி, தங்களுடைய பேருந்துகளைப் போக்குவரத்தில் ஈடுபடுத்தியுள்ளனர்.

இதை விட வீட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கிராமங்களில் செய்கின்ற அட்டகாசங்கள் சாதாரணமானதல்ல.

வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுததும் - கண்காணிக்கும் பணிகளில் ஈடுபடும் இவர்களிற் சிலர், தங்களிடமே



கட்டட மூலப்பொருட்களை வாங்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கின்றனர். அவ்வாறு இவர்களிடம் வாங்கவில்லை என்றால், கட்டம் கட்டமாக வழங்கப்படும் பயனாளிகளுக்கான நிதியை வழங்குவதில் இழுத்தடிப்புகளைச் செய்வதும், கட்டப்படும் வீடுகளின் கட்டுமானப் பணிகளில் குறைபாடுகளைக் கண்டு பிடித்து நெருக்கடிக்குள்ளாக்கும் காரியங்களும் நடக்கின்றன. இது பலவந்தப்படுத்தித் தங்களுடைய வியாபாரத்தைச் செய்யும் அதிகாரமின்றி வேறென்ன?

கிராம மக்களின் அறியாமையையும் இயலாமையையும் பயன்படுத்தி இந்த மாதிரியான காரியங்களைச் செய்கின்றனர் இவர்கள்.

இப்படி ஊரையே கொள்ளையிடும் காரியங்கள் தாராளமாகவே நடக்கின்றன. சிறிய மட்டத்திலான உத்தியோகத்தர்களிலிருந்து தொடங்கி, உயர் அதிகாரிகள் வரையில் ஒரு கூட்டம் இந்த வாய்ப்பை நன்றாகவே பயன படுத்திக் கொள்கிறது. தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களும் இதிற்சேர்த்தி.

வன்னி மக்கள் மயிரிழையில் உயிர் தப்பி நப்பிய அந்த உயிரை மட்டுமே கொண்டு முகாம்களுக்குப் போனதிலிருந்து தொடங்கியது இந்த இரத்தத்தை உறிஞ்சும் காரியங்கள். அல்லது மலைகளைக் காவிக்கொண்டு போகும் விசயங்கள்.

அகதிகளுக்கென்று வரும உடைகளில், அவர்களுக்கான தண்ணீரில், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சாப்பாட்டில், அகதிகளுக்கென்று கொடுக்கப்படும் உதவிப் பொருட்களில், அவர்களுக்கான உணவுப் பொருட்களில் என்று இந்தக் 'கைவைப்புகள்' ஆரம்பமாகின.

சனங்களையும் அரசாங்கத்தையும் சமநேரத்தில் உறிஞ்சும் 'சுழியன்கள்' இந்தச் சந்தர்ப்பத்தில் மிக உச்சமாகத் தங்களின் கைத்திறனைக் காட்டினார்கள்.

மெனிக்பாமில் உழைத்தவர்கள் - மெனிக்பாமின் பேரில் (வன்னி அகதிகளின் மிகப்பெரிய அகதி முகாம் இங்கேதான் இருந்தது) உழைத்தவர்கள் என்றொரு பெரும் பட்டியலே இன்று உண்டு. அந்தளவுக்குத் தாராளமாக அங்கே, அப்போது உழைத்தார்கள்.

போரிலே உழைத்தவர்கள் பலருண்டு. ஆயுதக் கொள்வனவு தொடககம் அகதிகளுக்கான உதவிப்பொருட்களின் வழங்கல்வரை ஏராளம் வழிகளில் தங்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டவர்கள் பலர்.

போருக்குப் பிறகு இன்னொரு சூழல் உருவாகிய போது அதில் இன்னொரு சாரார் உழைக்கத் தொடங்கியிருக்கின்றனர். ஆனால், இது எல்லாவற்றையும் இழந்திருக்கும் மக்களின் கண்ணீரிலிருந்து - அவர்களடைந்திருக்கும் காயங்களிலிருந்து உறிஞ்சிக்கொள்ளும் காரியங்கள்.

மக்களுக்குக் கொடுக்கப்பட்ட சீமெந்தில், தகரத்தில், பெட்சீற்றில், பாயில் என்று தொடங்கி, இப்போது மில்லியன் கணக்கிலான நிதியில் கையை வைத்துப் பையை நிரப்பிக் கொள்ளும் நிலைக்கு இது வளர்ந்துள்ளது.

இதைத் தடுப்பதற்கு உள்ள ஒரேயொரு வழி மக்கள் விழிப்படைவது மட்டுமே. அந்த விழிப்பை ஏற்படுத்துவதில் பெரும்பங்கு ஊடகங்களுக்கும் சமூக சிந்தனையுடையோருக்குமே உண்டு.

# தாயகம் திரும்பிய தமிழர்கள் விபரம் திரட்டுகிறது கனடா



(யாழ்ப்பாணம்)

கனடாவிலிருந்து மீண்டும் இலங்கைக்குத் திரும்பிய புலம்பெயர் மக்களின் விபரங்களையும், தேவைகளையும் திரட்டித் தருமாறு கனடா உயர்ஸ்தானிகர் அலுவலக இரண்டாம் செயலாளர் கியுலமி பொனாட் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள கனடா உயர்ஸ்தானிகர் அலுவலக இரண்டாம் செயலாளர் நேற்று யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட வேளை, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரை யாழ். மாவட்ட செயலக அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். நேற்றுக் காலை 11.00 மணிக்கு இடம்பெற்ற இச்சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்த தமிழ் மக்கள் இலங்கைக்குத் திரும்பிய பின்னர் அவர்களின் இருப்பிடங்கள் மற்றும் வேலைவாய்ப்புக்கள் எவ்வாறு காணப்படுகின்றது என்றும், அத்துடன் அவர்கள் பொருளாதார ரீதியாக எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்தும் தகவல் அறிந்துகொண்டார்.

இவ்விடயங்கள் தொடர்பாக செயலாளரின் கேள்விகளுக்குப் பதிலளித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்ததாவது,

அவர்களின் இருப்பிடங்கள், வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், காணி, வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கனடாவில் மேற்கொள்ளப்படும் விழாக்களில் செலவழிக்கும் பணத்தினை அங்குள்ள புலம்பெயர் வாழ் மக்கள் இலங்கையிலிருக்கும் பாதிக்கப்பட்ட மற்றும் இழப்புக்களைச் சந்தித்த மக்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

அதேவேளை, யாழ். மாவட்டத்தில் இருக்கும் இருதய நோயாளர்கள் கொழும்பிற்குச் சென்று அங்கு சிகிச்சை பெற வேண்டியுள்ளது. யாழ். மாவட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் இருதய நோய் வைத்திய நிபுணர்கள் இருக்கிறார்கள். இருதய நோய் சிகிச்சையை ஆரம்பிப்பதற்கு 300 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாகவும், முதலாம் கட்ட வேலைகள் செய்வதற்கு 100 மில்லியன் ரூபா தேவைப்படும் வேளையில் 2 ஆம் கட்ட வேலை செய்வதற்கு கனடாவில் வாழும் புலம்பெயர் மக்கள் ஒவ்வொருவரும் பொறுப்பெடுத்து செய்ய முன்வரவேண்டும் எனவும் கனடா உயர்ஸ்தானிகர் அலுவலக இரண்டாம் செயலாளர் கியுலமி பொனாட்டிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எஸ்)

# யாழ். குடாவில் "திவிநெகும" முழு அளவில் நடவடிக்கை ஆரம்பம்

யாழ். மாவட்டத்தில் "திவிநெகும" செயற்திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். செயலகம் முடுக்கிவிட்டுள்ளது. ஒவ்வொரு கிராமங்களிலும் இத்திட்டத்திற்கான செயற்பாட்டுக் குழுக்கள் அமைக்கும் முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்புரைக்கு அமைய இந்நடவடிக்கையை மாவட்ட செயலகங்கள் ஊடாக பிரதேச செயலகப் பிரிவுகளில் கடந்த முதலாம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் இதற்கான செயற்பாடுகள் கிராம அலுவலர்கள் சமுர்த்தி அலுவலர்கள் தலைமையிலான குழுக்கள் வீடு வீடாகச்சென்று இப்பணியை முன்னெடுக்கவுள்ளனர். விவசாய நடவடிக்கையை மேற்கொள்வதில் காட்டப்படும் அக் கறைகள் மற்றும் மக்களுடைய விவசாய நடவடிக்கைகள் சம் பந்தமான ஆலோசனைகள் போன்ற பல விடயங்களும் இதில சேகரிக்கப்படவுள்ளன.

## அநாவசியமான...

ஆக்கிரமிப்புச் செய்வதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு சகல நாடுகளும் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும் என்றும் 'த பயனியர்' பத்திரிகை வலியுறுத்தியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நிறைவேற்றிக் கொண்டிருப்பதனால் இலங்கையைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்றை மனித உரிமைகள் பேரவை முன்மொழிவதற்கான தேவை இல்லை.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி யுத்தம் முடிவடையும் போது உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 90 ஆயிரமாக இருந்த போதிலும் இவர்களில் இன்று மீளக் குடியமர்த்தப்பட்டுவிட்டனர். மேலும் 6649 பேர் மாத்திரமே மீள் குடியமர்த்தப்பட இருக்கின்றனர்.

இலங்கையில் யுத்தவடுக்கள் மாறிக்கொண்டிருக்கும் வேளையில் சர்வதேச சமூகம் மீண்டும் யுத்தம் தொடர்பான அழுத்தங்களையும் குற்றச்சாட்டுக்களையும் இலங்கை மீது சுமத்துவது நியாயம் அற்ற மனிதாபிமானம் அற்ற செயல் என்றும் பயனியர் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## கத்தோலிக்க...

ஆனால் இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் தலைமையிலான வட பகுதியைச் சேர்ந்த 31 கத்தோலிக்க குருமார்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன், ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கும் இது தொடர்பில் மனுவொன்றையும் அனுப்பியுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இக்கடிதத்தில் விரிவாகக் குறிப்பிட்டிருந்த வடபகுதி கத்தோலிக்க சபை, இலங்கையில் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழு இந்த அமர்வில் திடமான முடிவுகளை எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை அரசாங்கம் தொடர்ந்து மறுத்து வரும் நிலையில், இவ் விவகாரம் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் முக்கியமானது என இக்கடிதத்தில் வடபகுதி கத்தோலிக்க சபையினர் தெரிவித்திருந்தனர்.

அத்துடன், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால மற்றும் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசாங்கம் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை எனவும் இக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எனவே, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகளை மேற்கொள்வதோடு, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்த அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் எனவும் வடபகுதி கத்தோலிக்க சபை அனுப்பிவைத்துள்ள இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாக்காளர் அட்டைகள் முல்லைத்தீவிற்கு வந்தன

(முல்லைத்தீவு)

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள புதுக்குடியிருப்பு, கரைத்துரைப்பற்று பிரதேச சபைகளின் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தபாலகங்களுக்கு உத்தியோக பூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ச.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

அஞ்சல் மூலம் வாக்களிக்கும் சகல உத்தியோகத்தர்களுக்கான வாக்காளர் அட்டைகளும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் சகல திணைக்களங்களிற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2010 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின்படி கரைத்துரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் 281 பேரும் புதுக்குடியிருப்புப் பகுதியில் 67 பேரும் அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். மாவட்டத்திற்கு புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக கே.ஈ.எல். பெரேராவும் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியாக செ.ஸ்ரீ.குகநேசன் ஆகிய இருவரும் நேற்று பதவியேற்றுக்கொண்டனர்.

யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அபேசிங்க பண்டார மற்றும் யாழ். பொலிஸ் நிலைய பொலிஸ் அத்தியட்சகர் சமன் சிகேரா தலைமையிலான பொலிஸ் அணியினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு சம்பிரதாய பூர்வமாகத் தமது பதவியை ஏற்றுக்கொண்டனர்.

முன்பு கொழும்பு தலைமை பொலிஸ் நிலையத்தின் நலன்புரி சேவைகள் ஒருங்கிணைப்பு இயக்குனராகக் கடமையாற்றிய வேளையே யாழ். மாவட்ட பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில், உதவிப் பொலிஸ் அதிகாரி குணசேகர மற்றும் யாழ். மாவட்டத்தின் 17 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் கலந்து கொண்டனர். (எஸ்)

## நாற்பதினாயிரம்...

பொதுமக்கள் தொகையை விட பன்மடங்கு அதிகம் என்றும் இம்முடிவு குறிப்பிட்டுள்ளனர். அரசாங்கப் படைகளின் திட்டமிட்ட எறிகணை வீச்சுக் காரணமாகவே பெரும்பாலான பொதுமக்கள் உயிரிழக்க நேர்ந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பும் போர் விதிகளை மீறிச் செயற்பட்டது கண்டறியப்பட்டதாகவும் தருஸ்மன் தலைமையிலான மூவர் குழு தனது ஆக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய பாரதூரமான முறைகேடுகள் தொடர்பில் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு ஒன்றை அமைப்பதையோ அல்லது குற்றவியல் விசாரணைகளை முன்னெடுப்பதையோ விடுத்து இலங்கை அரசு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைத்ததாக இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த குழுவுக்கு விதிக்கப்பட்டிருந்த ஆணை, அதன் கட்டமைப்பு, அது பிரயோகித்த முறை அனைத்தும், அவலகரமான யுத்தத்தின் இறுதி நாட்களில் நிகழ்ந்தது என்ன என்பதை வெளிக்கொண்டுவருவது தொடர்பிலான அதனது நாட்டத்தை சந்தேகத்துக்கு உள்ளாக்கியிருப்பதாகவும் மூவர் குழுவால் கூட்டாக எழுதப்பட்டிருக்கும் கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது.

## கூட்டமைப்புக்கு...

முதுகெலும்பில்லையா? என்று கேள்வி எழுப்பியுள்ளார். நிகழ்வில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, ஜெனிவா விவகாரம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரனுக்கு எதிராக ஊடகங்கள் திட்டமிட்டு செய்தி வெளியிட்டு வருகின்றன. ஜெனிவா விவகாரம் தொடர்பில் எடுக்கப்பட்ட முடிவு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒட்டுமொத்த முடிவாகும். ஊடகங்கள் இவ்வாறான நடவடிக்கைகளைக் கைவிடவேண்டும் என்று தெரிவித்தார்.

## பொறுப்புக் கூறும்...

விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். விசாரணைக்கு வலியுறுத்தும் ஐ.நா. செயலாளர், சர்வதேச நிறுவனங்கள், மனித உரிமை கண்காணிப்பகம் மற்றும் ஊடகங்கள் என்பவற்றின் கோரிக்கைகளை இலங்கை தட்டிக்கழித்து வருகிறது. எனவே மனித உரிமை விடயங்களுக்கு மத்தியில் பல சமூகத்தினர் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். மனித உரிமைகள் தின நிகழ்வில் கலந்து கொண்டிருந்த இரு அரசியல் செயற்பாட்டாளர்கள் டிசம்பர் மாதம் கடத்தப்பட்டனர்.

இது குறித்து மனித உரிமை ஆணைக்குழுவில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஊடகவியலாளர் கனத்த தேசப்பிரிய அச்சுறுத்தப்பட்டுள்ளார். அவருடைய குடும்பத்தினரும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். அச்சம் காரணமாக அவர்கள் இங்கு உரையாற்றுவதற்கு வரவில்லை.

இவ்வாறு அச்சம் காரணமாக அனேகமானோர் மனித உரிமை கண்காணிப்பகத்திற்கு வருகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குறித்து அனைத்து தரப்பினருக்கும் பொறுப்புக் கூறும் வகையில் சர்வதேச சுயாதீன விசாரணை பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு, ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் கூட்டத் தொடரில் உரையாற்றிய மனித உரிமை கண்காணிப்பகத்தின் பிரதிநிதி குறிப்பிட்டார்.

## சிசுவை வீச...

துணியில் சுற்றி பற்றைக்குள் வீசுவதற்கு முயற்சி செய்த வேளை பொதுமக்களால் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். பின்னர் யாழ். போதனா மருத்துவமனைக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து அம்புலன்ஸ் வண்டி ஒன்று அப்பகுதிக்கு விரைந்து வந்து தாயையும் சிசுவையும் அழைத்துச் சென்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். (எஸ்)

## ஆணைக்குழுவின்...

நிலைமையின் கீழ் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையை நாம் படித்துள்ளோம் அதில் உள்ள பரிந்துரைகளை வரவேற்கிறோம். இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அது வழி வகுக்கும். ஆனால் அதன் பரிந்துரைகளை செயற்படுத்தும் முறை குறித்து நல்லிணக்க ஆணைக்குழு எதுவும் அறிவிக்கவில்லை.

அத்துடன் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த இலங்கையுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# இலங்கைக்கு ஆதரவு நல்குவதற்கு 53 இஸ்லாமிய நாடுகள் முன்வருகை



(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக ஏதாவது பிரேரணை கொண்டு வரப்படுமாயின், அதற்கு எதிராக இலங்கைக்கு ஆதரவு நல்குவதற்கு மேலும் பல நாடுகள் முன்வந்திருப்பதாக பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமை பேரவை மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பியுள்ள பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவு நல்குவதற்கு 53 இஸ்லாமிய நாடுகள் அங்கம் வகிக்கும், இஸ்லாமிய மாநாட்டுப் பேரவை (ஓ.ஐ.சி) முன்வந்துள்ளது.

இலங்கைக்கு ஆதரவு நல்குவதற்கென விசேட தீர்மானமொன்றை நிறைவேற்றி, அத்தீர்மானத்தை ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைப் பேரவை மாநாட்டின் போதே இஸ்லாமிய மாநாட்டு பேரவை அறிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்திற்கெதிராக, இலங்கைக்கு ஆதரவு திரட்டிக் கொள்வதற்காக உலகின் பல நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களையும், முக்கியஸ்தர்களையும் நாம் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளோம்.

இப்பேச்சுவார்த்தைகளின் ஊடாக நல்ல முன்னேற்றங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்விவகாரம் தொடர்பாக நாம் பேச்சுவார்த்தை நடத்திய எல்லா நாடுகளும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை பெரிதும் வரவேற்றன.

மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக ஏதாவது பிரேரணை கொண்டு வரப்படுமாயின், அதற்கு எதிராக இலங்கைக்கு ஆதரவு நல்க வேண்டுமென 53 இஸ்லாமிய நாடுகள் அங்கம் வகிக்கும் இஸ்லாமிய மாநாட்டு பேரவையின் செயலாளர் நாயகம் எக்மலடின் உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தோம்.

எமது வேண்டுகோளிற்கிணங்க, இஸ்லாமிய மாநாட்டு பேரவையின் விசேட கூட்டத்தில், இப்பேரவையில் அங்கம் வகிக்கும் சவுதி அரேபியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு போன்ற நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக ஏதாவது பிரேரணை கொண்டு வரப்படுமாயின், அதற்கு எதிராக இலங்கைக்கு ஆதரவு அளிக்க வேண்டும் எனப் பலமாக வலியுறுத்தின.


இப்பேரவையின் கூட்டத்தின் போது, இலங்கைக்கு சந்தர்ப்பமும், நேர காலமும் வழங்கப்பட வேண்டும். மேலும், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பெரிதும் வரக்கூடியதாகவுள்ளது.

இலங்கை ஒரு சிறிய நாடு. இந்நாட்டுக்கு சந்தர்ப்பமும், நேர காலமும் வழங்காமல் அவசர அவசரமாக நடவடிக்கை எடுப்பதல்ல என்றும் சுட்டிக்காட்டப்பட்டதுடன் இலங்கைக்கு ஆதரவு நல்குவதற்கு, தீர்மானம் எடுக்கப்பட்டன. இத்தீர்மானத்தை இஸ்லாமிய மாநாட்டுப் பேரவை, மனித உரிமை பேரவை மாநாட்டின் போதும் அறிவித்தது என பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

# துமிந்த இடத்திற்கு ரோஹித்த

(கொழும்பு)

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து, வெளிநாட்டில் சிகிச்சை பெற்று வரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, பூரண குணமடைவது குறித்து மருத்துவர்கள் சந்தேகம் வெளியிட்டு வருவதால், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இரத்தாகும் பட்சத்தில், அந்த இடத்திற்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவை நியமிக்க வாய்ப்பிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டவர்களில் அடுத்தபடியாக அதிக விருப்பு வாக்குகளை சந்தன கத்தரியாராச்சியே பெற்றுள்ளார். அவருக்கு எதிரான வழக்கில் இருந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ள போதிலும் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றுவதில் சட்டச் சிக்கல்கள் உள்ளன. இந்த நிலையில் ரோஹித்த போகொல்லாகம நாடாளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

துமிந்த சில்வாவுக்கு ஏற்கனவே மூன்று மாத விடுமுறை வழங்கப்பட்டுள்ளதுடன் தேவையேற்படும் பட்சத்தில் மேலும் மூன்று மாத காலம் விடுமுறை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வவுனியா வீதி விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

(வவுனியா)

மன்னார் - வவுனியா பிரதான வீதியின் காளிகுளம் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

குறித்த வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த ஒருவர் மீது வாகனம் ஒன்று மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் வவுனியா பெரியபனே பகுதியைச் சேர்ந்த 52 வயதான கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் என்பவரே உயிரிழந்தவராவார். சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பூஸா பொறுப்பதிகாரியை நீதிமன்றில் ஆஜராக பணிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகர் தொடர்பான தகவல்களைத் திரட்டியதாகக் கூறப்படும் ரமேஸ் எனப்படும், விடுதலைப் புலி உறுப்பினர் தொடர்பான தகவல்களை மறைத்ததாக முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இக்குற்றச்சாட்டின் பேரில் பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நீதிமன்றத்திற்கு வழங்கிய முறைப்பாட்டை அடுத்து, பூஸா தடுப்பு முகாமின் பொறுப்பதிகாரியை எதிர்வரும் 14 ஆம் திகதி பிரத்தியேகமான ரீதியில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே உள்ளிட்ட சிலர் உயிரிழந்தமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் சந்தேகத்தின் பேரில் லக்ஷ்மன் குரே என்கின்ற முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

# இலங்கை உயர்ஸ்தானிகராலயம் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய 200 பேர் கைது

(சென்னை)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆழ்வார்பேட்டையில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் உட்பட 200 பேரை தமிழக பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.



இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு காரணமானவர்களுக்கு தண்டனை கிடைக்கப்பட வேண்டும்.

அவர்களை இந்தியா ஆதரிக்கக் கூடாது என்று வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்து இருந்த நிலையில் ஆழ்வார்பேட்டையில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் பொலிஸாரின் உத்தரவையும் மீறி இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டதை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஜனநாயக விரோத செயற்பாட்டில் சீன தொலைத்தொடர்பு நிறுவனங்கள்



(கொழும்பு)

சீன தொலைத்தொடர்பு நிறுவனங்கள் இலங்கையில் ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றஞ்சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் சீனத் தொலைத்தொடர்பு கருவிகளைப் பயன்படுத்தி தனிப்பட்ட நபர்களின் தொடர்பாடல் நடவடிக்கைகளை உளவு பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் குறித்து சீன அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும். தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்கவும், மின்னஞ்சல்களை இரகசியமாக பார்வையிடவும் சீனத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படுகிறது.

சீனாவின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனங்களாக இசற்.ரீ.ஈ மற்றும் ஹுவேய் ஆகிய நிறுவனங்கள் இவ்வாறு அரசாங்கத்திற்கு உதவி வருகின்றன.

இலங்கையில் தொலைபேசி ஒட்டுக் கேட்டல் மற்றும் மின்னஞ்சல் இரகசியமாக பார்வையிடும் நடவடிக்கைகளுக்கு தமது நிறுவன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றமையை அந்தந்த நிறுவனங்கள் அறியுமா என்பது தெரியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் உலகின் பல நாடுகளில் இவ்வாறான கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், அந்த வகையிலான தொழில்நுட்பங்களின் ஊடாக துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுவதனை தடுப்பதற்கு கடுமையான சட்ட விதிகள் அமுல்படுத்தப்படுகின்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தேயிலை மாநாட்டில் பங்கேற்க சமரசிங்க ஜப்பான் பயணம்

(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவரும், பெருந்தோட்டத் துறை அமைச்சருமான மகிந்த சமரசிங்க ஜப்பான் சென்றுள்ளார். உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜப்பான் சென்றிருக்கும் அமைச்சர், அங்கு தேயிலை தொடர்பான மாநாடொன்றில் கலந்து கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 12 ஆம் திகதி இலங்கை திரும்பும் அவர் எதிர்வரும் 14 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கலந்து கொள்ளவதற்காக ஜெனிவா செல்லவிருப்பதாக பெருந்தோட்டத் துறை அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் மாநாடு எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்த மகிந்த சமரசிங்க கடந்தவாரம் நாடு திரும்பியிருந்தார். இவர் மீண்டும் 14 ஆம் திகதி ஜெனவா பயணமாக விருப்பதாக அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.



இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.